UNIVERSITY OF SRI LANKA JAFFNA CAMPUS
RECEIVED
1978-2-13
PERIODICALS DIVISION
LIBRARY

பக்கங்கள் 8 விலை சதம் 40 ★

# ஈழநாடு
THE EELANAADU

மலர் 20 தை 29 ரபி அவ்: 2 இதழ் 1
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 11-2-78

லாலா
நீலசோப்
25 மேல் உறைக்கு ஒரு அப்பியாசக் கொப்பி அன்பளிப்பு!
இன்றே லாலா நீல சோப்பை வாங்கிப் பாவித்துப் பாருங்கள்
லாலா சோப் தொழிற்சாலை
—அச்சுவேலி—

## 28 ருத்தல் சிமெந்து வருகிறது

(கொழும்பு)

இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம் சிறிய 'பெக்கட்'டுகளிலும் சீமெந்தை விற்பனை செய்யவிருக்கிறது.

28 இருத்தலைக் கொண்டதாக இப் பெக்கட்டுகள் இருக்கும் என்று கூட்டுத் தாபனத் தலைவர் திரு. சோவரத்ன தெரிவித்தார்.

புதிய திட்டம் விரைவிலேயே அமுலுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. [உ]

## இன்று இருபது

'ஈழநாடு' இன்று தனது இருபதாவது ஆண்டில் அடி எடுத்து வைக்கின்றது.

மகிழ்ச்சி நிறைந்த இச் சமயத்தில் இதுவரை தன்னை ஆதரித்து வளர்த்து வந்துள்ள அன்பர்கள் அனைவருக்கும் 'ஈழநாடு' தனது உளங்கனிந்த வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்ளுகின்றது.

எதிர்காலத்திலும் அன்பர்களின் அமோக ஆதரவு கிடைக்குமென்ற நம்பிக்கை 'ஈழநாடு' கொண்டிருக்கிறது.

இலங்கையின் வரலாற்றிலேயே தலைநகரான கொழும்புக்கு வெளியே அதுவும் ஈழத் தமிழரின் ராஜதானி என்று சொல்லப்படும் யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு தினசரிப் பத்திரிகை கடந்த பத்தொன்பது ஆண்டுகளாக வெளிவந்து கொண்டிருக்கிறதென்றால் ஈழம்வாழ் தமிழ்மக்கள் உவகையும் பெருமையும் கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு தினசரிப் பத்திரிகையை ஆரம்பித்து நடத்தவேண்டுமென்று பல பெரியோர்கள் நீண்டகாலமாக ஆவல்கொண்டிருந்தனர். அந்தஆவலை நிறைவேற்றிவைக்கும் துணிச்சலும் பாக்கியமும் திரு. க. சி. தங்கராசா அவர்களுக்கும் அவரது சகோதரர் அமரர் டாக்டர் க. சி. சண்முகரத்தினத்திற்குமே கிடைத்தது. இப்பத்திரிகையின் ஸ்தாபகர்களான அப்பெருந்தகைகளுக்கு எங்களது நன்றி மட்டுமல்ல ஈழத்துத் தமிழரின் நன்றியும் உரித்தாகும்.

சகல வசதிகளும் வாய்ப்பும் நிறைந்த கொழும்புப் பத்திரிகை ஏகாதிபத்தியத்துடன் போட்டியாக பலமைல்களுக்கப்பாலுள்ள யாழ்ப்பாணத்திலிருந்து ''ஈழநாடு'' பத்தொன்பதாண்டு காலமாகத் தொடர்ந்து பணி செய்து வருவதாயிருந்தால் அது சாதாரண விஷயமல்ல.

கடந்த சில ஆண்டுகளாக அரசாங்க விளம்பரமே ''ஈழநாடு'' பத்திரிகைக்குக் கொடுக்கப்படாமல் தடுத்துவைக்கப் பட்டிருந்தது.

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் அடிக்கடி தடைப்படும் தொலைபேசி தந்தித் தொடர்புகள்.

பத்திரிகைக் காகிதத்தின் விலைஉயர்வு, ஊழியரின் வேதன அதிகரிப்பு.

நாட்டில் கலவரங்கள் ஏற்பட்டதால் ஏற்பட்ட போக்குவரத்துச் சேவைப் பாதிப்பு.

இப்படி எத்தனையோ சோதனைகள்.

கடந்தகாலத்தில் நாம் ஈட்டிய சாதனைகளைவிட எமக்கு ஏற்பட்ட சோதனைகளும் வேதனைகளுமே அதிகம்.

ஆனாலும் ஈழத் தமிழ் மக்கள் பெருமையுறும் வகையில் ''ஈழநாடு'' பணிசெய்துவருகிறதென்றால் இறையருளும் அன்பர்களின் ஆதரவும் ஊழியர்களின் ஒத்துழைப்புமே காரணமாகும்.

பொறுப்புமிக்க காளைப் பருவத்தில் இன்று அடியெடுத்து வைக்கும் ''ஈழநாடு'' இன்னும் ஆற்ற வேண்டிய பொறுப்பான பணிகள் நிறைய இருக்கின்றன.

''ஈழநாடு'' மேலும் சிறப்புற வளர்ந்து தனது மகத்தான பணியைச் சிறப்பாகச் செய்வதற்கு மீண்டும் இறையருளையும் அன்பர்களின் ஆதரவையும் பணிவுடன் நாடி நிற்கின்றது.

# 'இனஒற்றுமை குறைகிறது; இதற்குப் பொலிஸாரும் காரணம்!
## கமிஷன்முன் யோகேஸ் சாட்சியம்'

(யாழ்ப்பாணம்)

**''யாழ்ப்பாணத்தில் ஒரு சிங்களவர்கூட கொலைசெய்யப்படவில்லை. சிங்களப்பெண் ஒருவர்கூடப் பலாத்காரம் செய்யப்படவில்லை என்பதை உறுதியாகக் கூறுகிறேன்' யாழ் வளாகத்தில் சிங்கள மாணவர் இருந்தும் ஒருவர்கூடத் தாக்கப்படவில்லை.''**

யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுவரும் சன்சோனி கமிஷன்முன் நேற்று சாட்சியமளித்த யாழ்ப்பாண எம். பி, திரு. வி. யோகேஸ்வரன் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. யோகேஸ்வரனை கதிரையில் அமர்ந்து சாட்சியமளிக்குமாறு கமிஷனர் கூறியபோது, தான் நின்றுகொண்டே சாட்சியமளிப்பதாகக் கூறினார்.

சன்சோனி கமிஷன் தலைவர் திரு. எம். சி. சன்சோனியும் சட்டத்தரணிகளும் இன்று மாலை சம்பவம் நடந்த இடங்களை நேரில் பார்வையிட விருக்கின்றார்கள்.

### ஒருமணி நேரம் யோகேஸ் சாட்சியம்

யாழ்ப்பாணம் எம் பி. திரு. வெ. யோகேஸ்வரன் சுமார் ஒருமணி நேரம் சாட்சியமளித்தார்.

இந்து இளைஞர் மன்ற சம்மேளனம் சார்பில் சிலர் சாட்சியமளிக்க விரும்புவதாகவும் அதற்கு நேரம் ஒதுக்கித் தருமாறும், சம்மேளனம் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம் கூறினார்.

### சிங்கள மாணவருக்கு அன்பு உபசரிப்பு

திரு. வெ. யோகேஸ்வரன் மேலும் கூறியதாவது;

''சிங்கள மாணவர்கள் கலவர நேரத்தில் அன்பாக பராமரிக்கப்பட்டதைப் பாராட்டி தென்பகுதியிலுள்ள பல பெற்றோர்கள் கடிதங்கள் எழுதியிருப்பதாக அறிகின்றேன். அம்மாணவர்கள் தங்கிருந்த வீட்டுக்காரர்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அவர்களை அன்புடன் நடாத்திய தற்குநன்றிதெரிவித்துள்ளனர்

### இன ஒற்றுமை குறைகிறது

''ஜனத்தொகுதிப்படி 1947ம் ஆண்டுக்குப் பின்னர் இரு இனங்களுக்குமிடையிலான ஒற்றுமை குறைந்துவரத் தொடங்கியது இதற்கு அரசியல் நடவடிக்கைகள் காரணமாக அமைந்திருந்தன. இதற்குப் பொலிஸாரின் கட்டுப்பாடில்லாத நடத்தையும் காரணமாயிருந்தது, தமிழ்ப்பகுதியில் உள்ள பொலிஸாரில் சுமார் 80 வீதமானோருக்கு தமிழ்மொழி தெரியாமலிருந்ததுடன் எதையும் தாங்கள் செய்யலாம் என்ற நினைப்பு பொலிஸாருக்கு இருந்துவந்துள்ளது. தமிழாராய்ச்சி மாநாட்டின்போது யாழ்ப்பாணத்தில் நடந்த சம்பவத்தை யிட்டு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதன் பின் செம்மணியில் நடந்த சம்பவம் தொடர்பாக நடந்த மரணவிசாரணையில் ஆஜரான சட்டத்தரணிகள் சுதந்திரமாக வீடு திரும்பமுடியாதநிலையிருந்து நீதிபதியின் வாகனத்திலேயே பாதுகாப்புடன் சென்றனர்.''

இன்றுகாலை 9-30 மணிக்கு விசாரணை தொடர்ந்து நடைபெறும். (க)

### குறிப்பு

திரு. வெ. யோகேஸ்வரன் எம். பி. சன்சோனி கமிஷன் முன் அளித்த சாட்சியத்தின் மிகுதிப்பகுதி நாளை வாரமலரில் இடம்பெறும்.

## ''தமிழர்-சிங்களவர் ஒன்றாக வாழும் சாத்தியம் இல்லை!''
### முன்னாள் மாவட்ட நீதிபதி சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

''இந்நாட்டிலுள்ள இரு இனங்களும் ஒன்றாக வாழக் கூடிய சூழ்நிலை இருந்தது தான். ஆனால் கலவர சம்பவத்தின் பின் ஒன்றாக வாழக் கூடிய எந்தவிதமான சாத்தியக் கூறுகளும் இல்லை என்றேநான் கருதுகிறேன்.'

யாழ்ப்பாணத்தில் நடக்கும் சன்சோனி கமிஷன் முன் சாட்சியமளித்த முன்னாள் மாவட்ட நீதிபதி திரு. எஸ். தம்பித்துரை மேற்கண்டவாறு கூறினார்.

திரு. தம்பித்துரை சாட்சியமளித்தபின், இதற்கான பரிகாரம் பற்றி உங்கள் கருத்தென்ன என்று கமிஷனர் கேட்டபோதே, மேற்கண்டவாறு அவர் பதிலளித்தார்.

### தமிழர்களை தனியாக...

திரு தம்பித்துரை மேலும் பதிலளிக்கையில், தமிழர்களை தனிப்பட்ட முறையில் அவர்களின் பாரம்பரியமான பிரதேசத்தில், தேசிய இனமாக

[6ம் பக்கம் பார்க்க]

தமிழ்ப் பெரும் தலைவர் அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும் லாலா நிறுவனத்தினரின் அஞ்சலி!
இல்லத்தரசிகள் விரும்புவது சன்சயின் பார் சோப்.
லாலா தொழிற்சாலை அச்சுவேலி

இருபதாண்டில் அடியெடுத்து வைக்கும் 'ஈழநாடு' மேலும் பல்லாண்டு வாழ
ரோஜு ஸ்தாபனத்தாரின்
உளம்நிறைந்த வாழ்த்து!

# வரி விளம்பரம்

**WANTED**
Qualfied Lecturer agricultre afternoon classes. Principal, J. C. Agricultural Institute, Maruthnnamadam, Chunnakam. 8472

## விற்பனைக்கு

யாழ்ப்பாண ஐக்கிய வியாபார சங்கத்தில் 3 பங்குகள் (Shares) பிலிப்ஸ் மின்சார ஷேவ் கருவி (Shaver) விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு 74 கோவில்வீதி, யாழ்ப்பாணம். 8478

வேப்பம் பலகைகள் விற்பனைக்கு உண்டு. 111, அரசடி ரோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். 8467

## தேவை

தையல் நிலையத்திற்கு நவீனமுறையில் துணிகள் வெட்டவும் பயிற்சி அளிக்கவும் அனுபவமுள்ள ஆசிரியையும், தையல் அனுபவமுள்ள பெண்களும், பற்றிக் அச்சடிப்பதில் அனுபவமுள்ளவர்களும் தேவை, விண்ணப்பிக்கவும். பொபி தையல் நிலையம், சண்டிலிப்பாய்சந்தி, சண்டிலிப்பாய். 8466

கிலிண்டர் மெஷின் இயக்குநர் உடன் தேவை. திருக்கணித அச்சகம், சாவகச்சேரி. 8444

## கோட்டு விற்பனவு விளம்பரம்

ஈடு: 89 கருங்காலி, காரைநகர் மேற்கு காரைநகர்
1. முருகேசு சுப்பிரமணியமும்
2. பெண் பரமேஸ்வரி வழக்காளிகள்

எதிராக

பாலாவோடை, காரைநகர் கிழக்கு காரைநகர்
1. ஆறுமுகம் தம்புவும் பெண்
2. பொன்னம்மா

எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் ஈடு 89-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக்காணிகளை 1978ம் வருடம் (6-3-78) பங்குனி மாதம் 6-ந் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு முதலாம் காணியும், 11-00 மணிக்கு இரண்டாம் காணியும் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபாய் 11,527/-ம் 28-4-76 தொடக்கம் 24-3-77 வரைக்கும் ரூபாய் 8,000/-க்கு 9 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 658/73.

### ஆதனவிபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவு கோவிற்பற்று காரைதீவு கிழக்கிறை 'சிறப்புலமும் பெரியபுலமும் பர. நில. இலா. 15 பதினைந்தும், வரன் பயிர்கள், செய்பயிர்களும் இதற்கு எல்லை கிழக்கு சண்முகம் கந்தையாவுக்கும், சண்முகம் கைம்பெண் சேதுப்பிள்ளைக்குமுரிய ஆதனங்கள், வடக்கு ரோட்டு, மேற்கு ரோட்டும் ஒழுங்கையும் தெற்கு செல்லத்துரைபெண் சரஸ்வதியினுதனம் இதடங்கலும்.

2. ஷெ காரைதீவு கிழக்கிறை 'கொட்டைப்புலம்' பர. நில. இலா 10½ பத்தரை, பனைகள், வடலிகள், தென்னைகள், வேம்புகளும், இதற்கு எல்லைகிழக்கு வீரகத்தி கந்தையாவுக்கும் பெண் பார்வதிக்கும் பங்காளருக்குமுரிய ஆதனமும், காக்கையன் கந்தனுக்கும் சுப்பிரமணியம் பெண் அன்னம்மாவுக்குமுரிய ஆதனம். வடக்கு சுப்பிரமணியம் பெண் அன்னம்மாவுக்கும் காக்கையன் கந்தனுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனங்கள், மேற்கு காக்கையன் கந்தனுக்கும் பங்காளருக்கும் முருகேசு சிற்றம்பலத்துக்குமுரிய ஆதனங்கள், தெற்கு ஐயன் வைரவனுக்கும் வீரகத்தி கந்தையாவுக்கும் பெண் பார்வதிக்குமுரிய ஆதனங்கள் இதடங்கலும்.

**நா. ஸ்ரீரங்கநாதன்**
விற்பனை ஆணையாளரும் விலைமதிப்பாளரும்.

6, கன்னாதிட்டி ரோட்,
யாழ்ப்பாணம், 12-1-78. 8476

## கோட்டு விற்பனவு விளம்பரம்

ஈடு 14720
தங்கோடை, காரைநகர்
1. சுப்பிரமணியம் யோகரத்தினமும் பெண்
2. செல்லம்மா வழக்காளிகள்

எதிராக

3-ம் கட்டை, கண்டிரோட், அரியாலை, யாழ்ப்பாணம்.
1. கார்த்திகேசு செல்லையாவும் பெண்
2. பூரணி எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் ஈடு 14720 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1978-ம் ஆண்டு (2-3-78) பங்குனி மாதம் 2-ந் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10-00 தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபாய் 9500/ம் 24-1-75 தொடக்கம் 5-6-75 வரைக்கும் ரூபா 5,000/க்கு 14 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 487/- இதில் ரூபாய் 1500/- கொடுபட்டுள்ளது.

### ஆதன விபரம்

வடமாமாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளி கோயிற்பற்று சிவியாதெரு இறை 'அத்திக்காடு வளவு' பர. நில. இலா 5, செய்பயிர்களும் மற்றும் அதைச் சேர்ந்தவைகளும். இதற்கு எல்லை கிழக்கு காசிநாதர் சபாபதிப்பிள்ளையின் உரிமையாளரினதும் பரமு இளையதம்பியினதும் ஆதனங்கள். வடக்கும் மேற்கும் விசுவநாதர் சுப்பிரமணியம் கைம்பெண் பாறுபதிப்பிள்ளைக்குரிய ஆதனங்கள். தெற்கு ரோட்டு, இதடங்கலும்.

**நா. ஸ்ரீரங்கநாதன்**
விற்பனை ஆணையாளரும், விலைமதிப்பாளரும்.

6, கன்னாதிட்டி ரோட்,
யாழ்ப்பாணம். 5-1-78. 8475

## விற்பனைக்கு

பரந்தன் முல்லைத்தீவு ரோட் 10-ம் கட்டை விசுவமடுவில் 2 ஏக்கர் மிளகாய் செய்கை காணியும் கிணறும் நேரில் தொடர்பு கொள்ளவும். தி. இராசேந்திரம் துறைமுகம், காரைநகர். 8470

6 ஸ்ரீ 9000 தொடர் இலக்கமுடைய ஸ்பிறிட்டா ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு. 111, அரசடி ரோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். 8468

## தேவை

பத்து வருடங்களுக்கு மேலான அனுபவமும் நற்பழக்கமும் நம்பிக்கையும் வாய்ந்த லொறி லைசென்ஸ் உள்ள வான் டிறைவர் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 8411, C/o ஈழநாடு. லிமிட்டெட், யாழ்ப்பாணம். 8411

வலி. கிழக்கு தென்பகுதி பலநோக்குக்
கூட்டுறவுச் சங்கம்

## வெற்றுச் சாக்கு கேள்விப் பத்திர அறிவித்தல்

ஷெ சங்கத்தில் 4184 வெற்றுச் சாக்குகள்வரை கேள்விப் பத்திரமூலம் விற்பனைக்கு இருக்கின்றது. 18-2-78 சனிக்கிழமை நண்பகல் 12-00 மணி வரை கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்களை 15-2-78 புதன்கிழமைவரை ஷெ சங்கக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். கேள்வி விண்ணப்பப் பத்திரத்திற்கு ரூபா 1/-ம் வைப்புப் பணமாக ரூபா 250/-ம் செலுத்தவேண்டும்.

மேலதிக நிபந்தனைகளையும் விபரங்களையும் ஷெ சங்கக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். எல்லாக் கேள்விப்பத்திரங்களும் பொது முகாமையாளருக்கு பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படல்வேண்டும். எக்கேள்விப் பத்திரமும் சங்கத்தால் நிராகரிக்கப்படுவதற்கு உரிமை உண்டு. தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "வெற்றுச் சாக்குகளுக்கான கேள்வி விண்ணப்பம்" என எழுதப்படல்வேண்டும்.

**பொதுமுகாமையாளர்.**
நீர்வேலி,
1978-02-09. 8479

சீதனம்

## வேண்டுமா வேண்டாமா? விவாதம்!

]யாழ்ப்பாணம்[

சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி உயர்தர மாணவர் மன்றத்தினருக்கும் கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவர்களுக்கும் இடையில் இந்துக்கல்லூரியில் "சீதனம் வேண்டுமா? வேண்டாமா? என்றதலைப்பில் விவாதம் நடைபெற்றது.

இவ்விவாதத்தில் ஸ்கந்தாவின் சார்பில் "சீதனம் வேண்டாம்" என்று செல்வன் க. வசந்தன் தலைமையில் செல்வன்கள் எஸ். மணிவண்ணன், எம். ஜீ. ஆர். கணேசன், எம். அற்புதராசா ஆகியோர் கலந்து கொண்டனர். செல்வன் மணிவண்ணன் சமுதாய நிலைகளையும் செல்வன் எம். அற்புதராஜா பொருளாதாரச்சூழல்களையும் பற்றி ஆராய்ந்து விவாதித்தனர். கொக்குவில் இந்துக் கல்லூரியினரும் நன்றாக விவாதம் புரிந்தனர்.

## யா/இந்து மகளிர் கல்லூரி

கூடைப் பந்தாட்டம் [Basket Ball], மேற்கத்திய பான்ட் வாத்தியம் [Western Band] கற்பிப்பதற்குத் தற்காலிக ஆசிரியர்கள் தேவை. 15-2-78 புதன்கிழமைக்கு முன் அதிபருக்கு விண்ணப்பிக்கவும்.

ப. இராமநாதன்
8471 அதிபர்

## ஆசிரியர் தேவை

யா/மெதடிஸ்த பெண்கள்
உயர்தர பாடசாலை, பருத்தித்துறை.

பின்வரும் பாடங்களைக் கற்பிப்பதற்குத் தற்காலிக ஆசிரியர்கள் உடனடியாகத் தேவை. அதிபருக்கு விண்ணப்பிக்கவும்.

(1) க. பொ. த. உயர்தர வகுப்புகளுக்கு (i) பௌதிகவியல், (ii) கணிதம்.
(2) நடனம்.

8474 அதிபர்

## பகிரங்க மலிவு விற்பனை

### 19-2-1978

வடமாகாணத்தில், முதல்முறையாக மக்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.

**இடம்:** யாழ்ப்பாணம் உலோகத் தொழிற்சாலை
45, பருத்தித்துறை வீதி, [குருநாதசுவாமி கோவிலுக்கு முன்பாக]
யாழ்ப்பாணம்.

**திகதி:** 19-2-1978 ஞாயிற்றுக்கிழமை
முற்பகல் 10 மணி தொடக்கம்

**விற்பனைப் பொருட்கள்:** நவீன முறையில் தயாரிக்கப்பட்ட இரும்புக் கேற்றுகள்-கிறில்கள். இரும்புக் கதிரைகள் [மெத்தையுடன்], றலி கரியர் சைக்கிள், மூன்று சில்லுச் சைக்கிள்கள் [வலது குறைந்தவர்களின் பாவிப்புக்கு], வாளிகள் மற்றும் பல வீட்டுப் பாவனைக்குரிய தளபாடங்கள், காஸ் வெல்டிங் செற் [பேசத்தல் இல்லாமல்].

**இவ்வரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்**

நீ. அன்ரனிப்பிள்ளை
22, கோவில் வீதி, ஏல விற்பனையாளர்.
யாழ்ப்பாணம். 8469

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்டநீதிமன்றம்

வழ இல: MB / 14322
வீரவாகு விஸ்வலிங்கம், விமன்காமம், தெல்லிப்பளை.
—வாதி

எதிராக

1. தாமோதரம்பிள்ளை சிவசம்புவும் பெண்
2. சிவபாக்கியமும் குரும்பசிட்டி, தெல்லிப்பளை

பிரதிவாதிகள்.

மல்லாகம் டிஸ்திரிக் கோட்டால் M/B / 14322-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1978ம் ஆண்டு பங்குனி மாதம் 6-ம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10-30 மணி (6-3-1978) தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

மேற்குறித்த பிரதிவாதிகள் குறித்த வாதிக்கு ரூபா 9,910/-வும் மேலும் ரூபா 5,500/-க்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு 18 வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1974-ம் ஆண்டு பங்குனி மாதம் 26-ந் திகதியிலிருந்து தீர்வைத்திகதியாகிய 1975-ம் ஆண்டு ஆனிமாதம் 5-ந் திகதி வரையுமான வட்டியும் அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரை சட்டவட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5வீத வட்டியும் வழக்குச் செலவு ரூ. 746/25 கொடுக்க வேண்டியிருப்பதாலும்.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் வடக்குப் பகுதி மயிலிட்டிக் கோவிற்பற்று மயிலிட்டி இறை "குசக்கிரி" நிலப்பரப்பு மூன்றேகால் (நில. பர. 3¼) பயிர்களும் வீடும் கிழக்கெல்லையில் இருக்கும் கிணற்றில் அரைவாசிப்பங்கில் இதற்குரிய பங்கும் எல்லை கிழக்கு வயித்திலிங்கம் பெண் அருமைமுத்துவின் காணி வடக்கு ஒழுங்கை மேற்கு மாப்பாணர் இளையதம்பிக்குரிய காணி தெற்கு மாப்பாணர் இளையதம்பி பெண்இரத்தினத்துக்குரிய காணி இது அடங்கலும் பதிவு H 179/24.

**சி. செ. பாலசிங்கம்,**
(கொமிஷனரும் மதிப்பாளரும்)

அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.
5-2-78. 8477

"என்னை ஆளாக்கிய கல்லூரிக்கு

# அரசியல் கற்புக் காத்தலே நான்செய்யும் கைமாறு"

## விக்ரோறியா விருந்தில் 'அமிர்'

[சங்கானை]

''எதிர்பாராத விதத்தில் அரசியல் சந்தர்ப்பவசத்தால் எனக்குக் கிடைத்த எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் நான் கத்திமுனையில் நின்று பணியாற்றுவது போன்று பணியாற்ற வேண்டியுள்ளது. கற்பு நெறி வழுவாத பெண் போல்-கொண்ட இலட்சியத்திலிருந்து அணுவளவும் பிசகாது அரசியல் கற்புநெறி காத்தலே என்னை இந்நிலைக்கு ஆளாக்கிய விக்ரோறியாக் கல்லூரிக்கு நான் செய்யும் கைமாறாகும்.''

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபருமான திரு. அ. அமிர்தலிங்கம் கூறினார்.

விக்ரோறியாக் கல்லூரி பெற்றோர், ஆசிரியர், பழையமாணவர்களும், தற்போதையமாணவர்களும் இணைந்து நடாத்திய இராப்போசன விருந்தின் போது பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே திரு. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவராகப் பதவியேற்ற கல்லூரி பழைய மாணவரான திரு. அமிர்தலிங்கத்தை கௌரவிக்குமுகமாக இந்த வைபவம் கல்லூரி அதிபர் திரு. ஏ. எம். ஸ்பென்சர் தலைமையில் நடைபெற்றது.

வட்டுக்கோட்டைத் தொகுதி தேசியப் பேரவை உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு, திருமதி திருநாவுக்கரசு, வடமாநிலக் கல்வியதிபதி திரு. தி.மாணிக்கவாசகர் ஆகியோரும் இவ்வைபவத்தில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டனர்.

திரு. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

''ஆசிரியர்களின் நற்பணியே தலைசிறந்த மாணவர்களை உருவாக்குவது. முன்னாள் விக்ரோறியாக் கல்லூரி ஆசிரியர்களின் சிறந்தபணியே எம்மையும் இந்நிலைக்கு உயர்த்திவைத்தது. ஒரு மாணவன் தான் கற்ற கல்லூரியின் பெருமையைக் கூறுவதிலும் பார்க்க அம்மாணவனின் தலைசிறந்த சாதனைகளால் அவன் கற்ற கல்லூரி பெருமையடைவதே சாலச் சிறந்ததாகும்.

### இனிய இளமை நினைவுகள்

இன்றைய அரசியல் நெருக்கடிகளுக்கு மத்தியில் நிம்மதியற்றிருக்கும் என்னை சில மணித்தியாலங்கள் இனிய இளமை நினைவுகளில் திளைக்கவைத்த இந்த நிகழ்ச்சி என் மனதைவிட்டு என்றும் அகலமாட்டாது.

### விசுவாசமற்ற எதிர்க்கட்சி

முன்பெல்லாம் எதிர்க்கட்சிகள் அரசை எதிர்த்து மட்டுமே வந்தன. ஆனால் எம்மைப் பொறுத்தவரையில் நாம் அரசை எதிர்ப்பது மட்டுமல்ல அரசுக்குவிசுவாசமற்றநிலையில் எமது இலட்சியத்திற்காகப் போராடவேண்டியுள்ளது.

# இந்திரா மீது

## ஜனதா தலைவர் கண்டனம்

புதுடில்லி, பெப். 10

''தமது ஆட்சிக் காலத்தில் ஒரு சர்வாதிகாரிபோல் நடந்துகொண்டவர் திருமதி இந்திரா காந்தி'' என்று ஜனதா கட்சித் தலைவர் திரு. சந்திரசேகர் கூறினார்.

அஸாமில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு சொன்னார்.

அவர் மேலும் பேசுகையில், நாட்டு முன்னேற்றத்துக்குரிய உருப்படியான திட்டம் எதுவும் இல்லாத திருமதி காந்தியும் திரு. ரெட்டியும் மக்களை ஏமாற்றுவதற்காக எதைஎதையெல்லாமோ பேசி மக்களைக் குழப்பிக் கொண்டிருக்கிறார்கள் ஜனதா கட்சி ஒன்றே நாட்டு நலனுக்காக உழைத்து வருகிறது என்றார். [உ]

• • •

## இன்று நடைபெறும் பரீட்சை

[ஆரியாலை]

சிறுபணிசெய்பவர் பதவி உயர்ச்சிக்கான விசேஷ பரீட்சை இன்று நடைபெறவிருக்கிறது.

கல்வி இலாகாவினால் நடாத்தப்படவிருக்கும் இவ் விசேஷ பரீட்சை மூன்று முறைகளுக்கு மேல் ஒத்திவைக்கப்பட்ட பின்னர் இம்முறை நடைபெறவிருக்கிறது இப்பரீட்சைக்கு அரசாங்க இலாகாக்களில் பணிபுரியும் சிறுபணி செய்யும் சிற்றூழியர்கள் பெருமளவில் தோற்றுகின்றனர். அ]

# 30 ஆண்டுகளுக்கு முன்னரே தனிநாட்டு உரிமைக்குரல் எழுப்பியவர்

## வட்டு 'திரு' பெருமிதம்

''அரசியல் தீர்க்கதரிசியான எமது தலைவர் திரு. அமிர்தலிங்கம் 1947ம் ஆண்டு சட்டக்கல்லூரி மாணவனாக இருந்தபோதே தமிழ்மக்களுக்காகஒரு தனிநாடு அமைக்கப்படவேண்டுமென்று சட்டக் கல்லூரியிலேயே உரிமைக்குரல் எழுப்பினார்''.

இவ்வாறு வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

1947ம் ஆண்டு தமிழ் மக்களுக்கு ஒரு தனிநாடு வேண்டுமா? என்ற பொருளில் சட்டக்கல்லூரியில் விவாதமேடை ஒன்றை திரு. அமிர்தலிங்கம் நடத்தியபோது தனிநாடு அவசியமென்று வாதாடிய அவர் தோல்வியுற்றதுடன் சட்டக் கல்லூரியின் விடுதியிலிருந்தும் வெளியேற்றப்பட்டார்.

எனினும் அவர் தாம் கொண்ட எண்ணத்திலிருந்து இலட்சியத்திலிருந்து இன்றும் நழுவவில்லை.

### மாதிரிப்பாடசாலை

வட்டுக்கோட்டை தொகுதி மாதிரிப்பாடசாலையாக இக் கல்லூரி வருங்காலத்தில் இயங்கும். இதனால் இப்பகுதி இளம் சந்ததியினர் நல்லபயன் அடைவர்

முன்னாள் விக்ரோறியாக்கல்லூரி ஆசிரியரும் இடைக்கால அதிபருமான திரு. சி. இரத்தினசபாபதி பேசுகையில் கூறியதாவது:

### தேசிய ஒற்றுமையை வலியுறுத்தவேண்டும்

தமிழினத்தின் தலைவனாக விளங்கும் திரு. அமிர்தலிங்கம் இளைஞர்களின் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி அவர்களை நல்வழிப்படுத்துவதன் மூலம் இந்நாட்டில் தேசிய ஒற்றுமையை வளர்க்கவேண்டும்.

நமது நாடு ஒரு சிறியநாடு. இதை இரண்டாகப் பிரிக்கக் கூடாது. நாட்டைப் பிரிப்பதனால் எவருக்குமே நன்மை ஏற்படாது.

### சிங்களமும் தமிழும் சகோதரமொழிகள்

எமது இனிமையான தமிழ்மொழி சிங்களத்துடன் இணைந்து சகோதரமொழியாக அரசுகட்டில் ஏறவேண்டுமென்பதே விருப்பமாகும் நாம் எல்லோரும் இதற்காகவே பாடுபடவேண்டும்.

முன்னாள் யாழ். இந்துக்கல்லூரி அதிபர் திரு. என். சபாரத்தினம் பேசுகையில் கூறியதாவது:

இந்திய சுதந்திரத்திற்காக பாடுபட்டசுபாஸ்சந்திரபோஸ் போன்று தமிழ் மக்களுக்கு திரு அமிர்தலிங்கம் கிடைத்திருக்கிறார். இவ்வாறு சிறந்தஒரு வீரனைத் தமிழ்இனத்திற்குத் தந்த விக்ரோறியாக் கல்லூரியின் பெருமை பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டும்.

அமரர் சிவபாதசுந்தரனார் செய்த தவப்பயனால் உருவாகிய இக் கல்லூரியின் பெருமையை நாடு முழுவதும் எடுத்தியம்பும் திரு. அமிர்தலிங்கத்தை எவரும் பாராட்டாமலிருக்க முடியாது.

வடமாநிலக் கல்வியதிபதி திரு. தி. மாணிக்கவாசகர் பேசுகையில், இலட்சிய வீரனாகத் திகழும் திரு. அமிர்தலிங்கத்தின் சாதனைகள் ஒப்பற்றவையாகும்'' என்றார். [இ]

# தமிழ்க்காங்கிரஸை ஜி.ஜி. உருவாக்கியதன் காரணம்

## நினைவுதினக் கூட்டத்தில் 'அமிர்'

[யாழ்ப்பாணம்]

''இந்த நாட்டின் தேசிய ஒற்றுமைக்கு வழிவகுத்த தமிழ்த் தேசிய இனத்தை அழிப்பதற்காகவும், சிங்கள பௌத்த சாம்ராச்சியத்தை இலங்கையில் நிறுவுவதற்கும், வகுப்புவாதிகளான சிங்களத் தலைவர்கள் சிங்கள மகாசபையை 1935ம் ஆண்டு நிறுவினார்கள். இதன் பின்னரே தமிழ்த் தலைவர்கள் சிங்களத் தலைவர்களின் அழிவிலிருந்து தம்மைப் பாதுகாப்பதற்காகப் பிரிவினைவாதிகளாக அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியை நிறுவினர்'' என்று நேற்று முன்தினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் முதலாவதுசிராத்த தின அஞ்சலிக் கூட்டத்திற்குத் தலைமைவகித்து உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபருமான திரு. அ. அமிர்தலிங்கம் கூறினார்.



அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

'1915ம் ஆண்டு நடைபெற்ற இனக் கலவரத்தினால் சிங்களத் தலைவர்கள் எல்லாம் சிறையில் அடைக்கப்பட்டபோது, சேர் பொன். இராமநாதன் தாமாகவே அவர்களுக்காகப் பிரிட்டன் சென்று, வாதாடி விடுதலை பெற்றுக் கொடுத்தார். அவர் திரும்பவும் இலங்கை வந்தபோது கொழும்புத் துறைமுகத்தில் அவரை ஏற்றிவந்த குதிரை வண்டியைச் சிங்களத் தலைவர்களே இழுத்துவந்தனர். இந்த வகையில் தேசிய ஒற்றுமை வளர்ந்த காலகட்டத்தில் காலத்திற்குக்காலம், சிங்களத் தலைவர்களின் வகுப்புவாத உணர்வு தமிழரை அழிக்க முனைந்தது.

### அரசியல்வாதிகள் படிக்கவேண்டியது

''நான் சிறுவனாக இருந்த காலத்தில் அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம் சோல்பரி அரசியல் சட்டத்தின் வெள்ளை அறிக்கையை எதிர்த்து அவர் ஆற்றிய 9 மணித்தியால உரையைப் படித்திருக்கிறேன். எந்தவொரு அரசியல்வாதியும் நிச்சயமாகப் படிக்கவேண்டியது. 1936ம் ஆண்டிலேயே தமிழ்த் தேசிய இனத்தை அழித்தொழிப்பதற்குச் சில தமிழ்த் தலைவர்களைப் பயன்

[6-ம் பக்கம் பார்க்க]


# அம்புஷ் 25

வெங்காயம்-மிளகாய்

பயிர்களை தாக்கும் புளுக்களை

கட்டுப்படுத்த வல்ல

சக்திவாய்ந்த கிருமிநாசினியாகும்.

4000 கன்றுகளுக்கு போதுமான

2 அவுன்ஸ் (50ML) அம்புஷ்

கிருமிநாசினியின் விலை:
ரூபா 35-40 சதம் மட்டுமே

மேலதிக விபரங்கட்கு:

த ரோரு லிமிட்டெட்,

32, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல: 7651



# 1959-ல்..

**1959-ம் ஆண்டில் 'ஈழநாடு' முதலாவது இதழில் நிர்வாகிகள் சார்பில் திரு. க சி தங்கராசா எழுதிய கட்டுரை இது. 'ஈழநாடு' என்ன நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டதென்பதை புதிய சந்ததியினர் தெரிந்து கொள்வதற்காக இன்று இருபதாம் ஆண்டில் 'ஈழநாடு' அடி எடுத்து வைக்கும் தினத்தில் மறு பிரசுரம் செய்கிறோம். (ஆ-ர்)**

ஈழநாடு இலங்கையின் வரலாற்றில் மிக முக்கியமானதொரு கட்டத்திலே தோன்றியுள்ளது. சிக்கல்கள் மிகுந்துள்ள இன்றைய நிலையில் எத்திக்கை நோக்கிச் செல்லவேண்டுமெனத் தெரியாது தமிழ் பேசும் மக்கள் திகைத்து நிற்கின்றனர். இவ்வேளையில் உண்மை தெய்வீகமானது; கருத்துரைகள் கட்டுப்பாடற்றவை என்ற பத்திரிகா தர்மத்தை இலக்காகக் கொண்டு, உள்ளதை உள்ளவாறு எடுத்துரைக்கவும், கருத்துரைகளைப் பரிமாறிக் கொள்ளவும் ஈழநாடு உதயமாகியுள்ளது.

தமிழ்மக்களிடையே நிலவிவரும் பலதரப்பட்டகருத்துக்களுக்கு ஓர் அரங்கமாக உதவுவதற்கும், தெளிவாகச் சிந்தித்து நிலைமைகளை நன்கு ஆராய்வதற்குமாகவே இவ்வார இதழ் வெளிவருகின்றது. இத்தகையதொரு வெளியீடு மக்களுக்கு அவசியமென்பதில் கருத்துவேற்றுமைக்கு இடமேயில்லை. வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும், மலைநாட்டிலும் வாழும் தமிழ்பேசும் மக்கள் தங்குதடையின்றித் தங்கள் உளப்பாங்கை வெளியிடுவதற்கு இன்று ஒருபத்திரிகை அவசியமென்பதை இலங்கைவாழ் தமிழ் மக்களின் எதிர்கால நல்வாழ்வில் அக்கறையுள்ள அனைவரும் ஒப்புக்கொள்வர் இந்த அவசிய தேவையை நிறைவேற்றுவதற்காகவே மிகுந்த இன்னல்களுக்கிடையில் ஈழநாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இலங்கைத் தமிழரனைவருக்கும் பொதுவான பத்திரிகை இல்லையென்றே கூறவேண்டும். ஒரு சில பத்திரிகைகள் உளவாயினும் அவற்றுட் சில அரசியல்கட்சி சார்புடையனவாகும். வேறு சில சமயப்பற்றுள்ளனவாகவும் பணியாற்றிவருகின்றன.

## வேற்றுமையில் ஒற்றுமைகாண...

ஈழவள நாட்டிலே பல சமூகத்தினர் இருக்கின்றார்களெனினும், தமிழரின் சொந்தப் பண்பாட்டினையும், உரிமைகளையும் எடுத்துரைக்கும்போது பிற சமூகத்தினரும் இந்நாட்டில் வாழ்ந்து வருகின்றனர் என்பதை உணர்ந்து, வேற்றுமையில் ஒற்றுமைகாண முயலவேண்டும். ஒற்றையாட்சி நிலவும் இந்நாட்டில் மனிதஉரிமைகளைப் பெறுவது சாத்தியமானதா? அடிப்படை உரிமைகள் அனைத்தும் நன்று பாதுகாக்கப்படுமா? அன்றேல் சமஷ்டிதான் இலங்கைக்கு உகந்ததா? மாகாணசுயாட்சிமுறை எமது தேவைகள் அனைத்தையும் நிறைவேற்றத்தக்கதா? இவை போன்ற கேள்விகளுக்கு விளக்கம்தரும் கருத்தரங்கமாக ஈழநாடு விளங்கும்.

தமிழினத்தின் பொருளாதாரநிலை இன்று மிக மோசமாகிக் கொண்டுவருகின்றது. தமிழ் மக்கள் அரசாங்க சேவையை நம்பி வாழுங்காலம் மீண்டும் வரப்போவதில்லை. உத்தியோகப் பதவிகள் சம்பந்தமான தேர்வுகளில் அரசாங்கம் பாரபட்சமின்றி நடந்தாலும் கூட, இன்றைய நிலையிற் போதிய உத்தியோகங்கள் கிடைக்குமென நாம் எதிர்பார்க்கவே முடியாது. இந்நிலையிலே புத்தம் புதிய துறைகளை ஆராய்ந்து நமது பொருளாதார நிலையைச் சீராக்க வழிவகைகளைத் தேடவேண்டும். தலைமுறைதலைமுறையாகத் தமிழர் வாழ்ந்துவந்த பகுதிகளிற் பொருளாதாரச் சீரமைப்புக்கான புதியபணிகளை நாம் மேற்கொள்ளவேண்டும். அதனை விடுத்துப் பொருளாதார விருத்திபற்றி வெற்றுரை பேசித்திரிவதிற் பயன் எதுவுமில்லை.

## பொருளாதார வளர்ச்சிக்கு உதவ...

பொருளாதாரவிருத்தி இருதுறைப்பட்டது, ஒன்று தனிப்பட்டவர்களின் முயற்சியை அடிப்படையாகக் கொண்டது. மற்றது அரசாங்கத்தின் முயற்சியை அடிப்படையாகக் கொண்டது. தனிப்பட்டோரின் முயற்சி அனைத்தும் தமிழர்கையிலேயே தங்கியிருக்கிறது. இவர்கள் தமிழர் வதியும் இடங்களில் உள்ள மூலவளத்தை ஆராய்ந்து, தகுந்த திட்டத்தை ஒருமுகமாகச் சமர்ப்பித்தாலன்றி அரசினரிடமிருந்து மிகுந்த பயனைப் பெறமுடியாது. வடக்கிலும் கிழக்கிலும் வாழ்ந்துவரும் தமிழ்பேசும் முஸ்லிம்களின் ஆதரவும், மலைநாட்டில் வாழும் தமிழ்மக்களின் நட்புறவும், பொதுவாக இலங்கைக்கும், சிறப்பாகத் தமிழினத்தின் பொருளாதார வளனுக்கும் இன்றியமையாதன என்பதை இங்கு எடுத்துக்காட்டவேண்டியதில்லை

தமிழரிடை கல்வி பயின்ற நடுத்தரவகுப்பினருக்கு, அரசாங்க சேவையில் பதவிகள்தேடுவதிலேயே இதுவரை கவனம் செலுத்திவந்தோம். தமிழினத்தின் பொருளாதார வளர்ச்சியைப் பற்றி நாம் சிந்தித்ததேகிடையாது. இது உண்மையாகவே கவலைக்குரியது. கமக்காரரையும், தொழிலாளரையும் எதிர்நோக்கி நிற்கும் சிக்கல்களை நீக்க இனியேனும் நாம் அயராதுஉழைக்கவேண்டும். இதனோடு இணைந்துள்ள மற்றொரு சிக்கல் தாழ்த்தப்பட்டோர் எனப் பெயரிட்டு நாம் ஒதுக்கிவைத்துள்ள சிறுபான்மைத் தமிழரைப் பற்றியதாகும். மக்களாட்சி, சமூகநீதி, என்றெல்லாம் பேசப்படும் இந் நாட்களிலே தாழ்த்தப்பட்ட சமூகம் என நம்மில் ஒரு பகுதியினரை நாம் ஒதுக்கிவைத்துவிட்டு, தமிழினத்தின் உரிமைகளுக்காகப் போராடுவது அர்த்தமற்றதாகும். இவர்களுக்கு விளைவிக்கப்பட்டுள்ள அநீதிகள் அனைத்தும் அறவே அகற்றப்படவேண்டும்.

சாதிமதப் பாகுபாடுகளால் ஏற்பட்டுள்ள நெருக்கடியை நீக்கி, தமிழ்மக்களை ஒருமுகப்படுத்தி, அவர்களை ஆக்கபூர்வமான முயற்சிகளில் வழிப்படுத்துவதற்கு ஈழநாடு பணி செய்யும். பின் தங்கிய நாடுகளை இன்று பசியும், பிணியும், வறுமையும், வாட்டி வருகின்றன' இவற்றை நீக்குவதற்குப் பொதுவுடமை ஆட்சிதான் சிறந்ததென்ற கருத்து வலுப்பெற்று வருகின்றது. இவற்றை நீக்குவதற்குப் பொதுவுடமைதான் இலங்கைக்கு உகந்ததென ஒரு சாரார் கூறுகின்றனர். உரிமைகள் இழந்து நிற்கும் தமிழ்மக்களைக் காப்பாற்றும் சக்தி பொதுவுடமை ஆட்சிக்கே உண்டெனக்கூறுவோருமுளர். இவர்கள் அனைவரினதும் கருத்துக்கள் இப்பத்திரிகையில் இடம்பெறும்.

வறுமையினின்றும் விடுதலைபெற்று வாழ்க்கையை நடத்துவதற்கு நிலையான வருவாயைத் தேடிக்கொள்வது பொருட்செல்வத்தைப் பொறுத்தமட்டில் வரவேற்க வேண்டியதுதான். அதேவேளையில் அருட்செல்வத்துக்குரிய ஆத்மீகப் பண்புகளையும் ஈழநாடு பேணிக்காக்கும். கல்வி, கலாசார விருத்திகளுக்கான துறைகளில் ஈழநாடு மிகுந்த கவனம் செலுத்தும். இன்று தொழிற்கல்வி உடனடியான தேவைகளில் ஒன்று கலாச்சாரப்பயிற்சியின் அடிப்படையிலே தான் தொழிற்கல்வி அமையவேண்டும். இத்தனைக்கும் தொழில் வல்லுனர் நாட்டுக்குக் கண்ணின்மணி போன்றவர்கள். இவர்கள் மாத்திரமன்றி, கவிஞர்கள், எழுத்தாளர்கள், நாடகாசிரியர்கள், நாட்டியக் கலைஞர்கள், இசை வல்லுனர்கள், தத்துவ ஞானிகள் எல்லோரும் நாட்டிற் பெருகவேண்டும்.

சொந்த நாட்டிலே சகல இனத்தினரும், மதத்தினரும் அரசியல், பொருளாதார உரிமைகளைப் பெற்றுச் சுதந்திரத்துடன் இணைந்து வாழ ஈழநாடு உழைத்து வரும். உலக அரங்கிலே பஞ்சசீலம், இணைந்து வாழ்தல் என்ற அடிப்படையில் ஈழநாடு உலக சமாதானத்தை வளர்க்கத் துணை செய்யும்.

இலங்கைத் தமிழ்பேசும் மக்களின் எதிர்கால வாழ்வில் அக்கறை கொண்டுள்ள அனைவரிடமிருந்தும் ஈழநாடு கருத்துரைகளை எதிர்பார்க்கின்றது. ..த்துடன் குறைபாடுகளை எடுத்துக்காட்ட வாசகர்கள் தயங்கவேண்டியதில்லை. ஈழநாடு தனது எதிர்காலத்தைத் தமிழ் பேசும் மக்களிடம் ஒப்படைப்பதுடன், தமிழ் மக்களின் நல்வாழ்வுக்கே தன்னையும் சமர்ப்பணம் செய்கின்றது.

# இருபது ஆண்டில் '

'ஈழநாடு' இன்று தனது இருபதாவது ஆண்டில் அடி எடுத்துவைக்கிறது. இருபது ஆண்டுகள் என்பது சாதாரண விஷயமல்ல, ஈழநாடு நிர்வாகிகள் சார்பில் 1959ம் ஆண்டில் முதலாவது இதழிலும் 1969ம் ஆண்டில் பத்தாண்டுச் சிறப்பிதழிலும் மலரிலும் நான் எழுதுவதற்குப் பாக்கியம் கிடைத்திருப்பதை எண்ணிப் பெருமையும் பூரிப்புமடைகிறேன்.

'ஈழநாடு' பத்தாவதாண்டு நிறைவு மலரில் நான் எழுதிய போது 1959ல் தெரிவித்த கருத்துக்களை அடியொற்றி. என்மனதுள் எழுந்த சில எண்ணங்களையும் பகிர்ந்து கொண்டதோடு 'ஈழநாடு' நிறுவனத்தின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் வழிகோலிய சக்திகளைப்பற்றிய சில தகவல்களையும் உங்கள் முன் வைத்திருந்தேன்.

''ஈழநாடு'' இலங்கையின் வரலாற்றில் மிகமுக்கியமானதொரு கட்டத்திலே தோன்றியுள்ளது. சிக்கல்கள் மிகுந்துள்ள இன்றைய நிலையில் எத்திக்கை நோக்கிச் செல்ல வேண்டுமெனத் தெரியாது தமிழ் பேசும் மக்கள் திகைத்து நிற்கின்றனர். இவ்வேளையில் உண்மை தெய்வீகமானது; கருத்துரைகள் கட்டுப்பாடற்றவை என்ற பத்திரிகா தர்மத்தை இலக்காகக் கொண்டு, உள்ளதை உள்ளவாறு எடுத்துரைக்கவும், கருத்துரைகளைப் பரிமாறிக் கொள்ளவும் ஈழநாடு உதயமாகியுள்ளது'' என்று 1959ம் ஆண்டில் ஈழநாடு முதலாவது இதழில் எழுதியிருந்தேன்.

இன்று இருபதாண்டுகளின் பின்னும் தமிழ் பேசும் மக்களுடைய நிலையிலும் அவர்களுடைய தேவைகளிலும் மாபெரும் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை.

'ஈழநாடு' பத்தாவது ஆண்டு நிறைவைப் பெரும் விழாவாகக் கொண்டாடினோம்.

கடந்த பத்தாண்டுகளுக்குள் கூட எத்தனை சோதனைகள்? அவசரகாலநிலை; பத்திரிகைத் தணிக்கை என்னுளத்தனையோ!

இப்பொழுது இலங்கை அரசியலில் புதியபெரும் மாறுதல் ஏற்பட்டுள்ளது. இந்த மாறுதல் எந்த அளவுக்கு எமக்குத் தாக்கத்தை ஏற்படுத்துகின்றதென்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்!

ஆட்சிபீடத்தில் மாற்றம் ஏற்படலாம் ஆனால் நாடும் மக்களும் சமுதாயமும் மாறுவதில்லை. மாறவும் முடியாது.

'ஈழநாடு' நாட்டுக்கும் நாட்டுமக்களுக்கும் சமூதாயத்துக்கும் சேவைசெய்வதையே நோக்கமாகக் கொண்டு உதயமானது.

**[க. சி. தங்கராசா]**

கடந்த இருபது ஆண்டு காலத்தில் பலசோதனைகளை எதிர்நோக்கவேண்டியிருந்த போதிலும் இறையருளாலும் ஊழியர்களின் ஒத்துழைப்பினாலும் நிர்வாகிகளின் உழைப்பினாலும் பொது மக்கள், வர்த்தகர்கள் ஆதியோரின் உதவி ஊக்கத்தினாலும் 'ஈழநாடு' இன்று இளம்பராயத்தைக் கடந்து வாலிபப் பருவத்தை அடைந்துள்ளது. 'இருபதுவயது என்பது வாலிப முறுக்கானபருவம்!

இந்த மிடுக்கான பருவம் வரை ஒருபிள்ளையையோ ஒரு நிறுவனத்தையோ வளர்த்தெடுப்பது மிகக்கடினமான காரியம்

பலநல்லோரின் ஆசியினாலும் ஒத்துழைப்பினாலும் இதுவரை மகத்தான சாதனையை நிறைவேற்றிவிட்டோம் என்றுநாம் பெருமைப்படுவதற்கு நியாயமிருக்கிறது.

ஆனாலும் கடந்துவந்த பாதையைப்பார்க்கும் போது நாம் முன்னேறிச் செல்ல வேண்டிய பாதைமிக நெடுந்தூரம் என்றே தோன்றுகின்றது.

என்றாலும் நாட்டின் நலனிலும் சமுதாயத்தின் அக்கறையிலும் ஆர்வம் கொண்ட மக்கள் இருக்கும்வரை நாம் எமது இலட்சியப்பாதையில் தொடர்ந்து செல்வோம் என்ற உறுதி எமக்குண்டு.

இதேசமயம் நான் மற்றொரு விஷயத்தையும் தெரிவித்துக் கொள்ளவேண்டியது எனது கடமையென்று கருதுகிறேன்

பத்திரிகை ஏகாதிபத்தியம் பற்றிப்பெரும் இடங்களிலெல்லாம் பேசப்பட்டுவந்த காலகட்டத்தில் இலங்கையின் தலைநகராகிய கொழும்புக்கு வெளியே எவருமே ஒருநாளிதழை வெளியிடுவதற்குச் சிந்திக்கவே இல்லை.

இன்றும் கொழும்பில் பத்திரிகை ஏகாதிபத்தியம் நிலவிய போதிலும் யாழ்ப்பாணத்திலிருந்து மட்டும்தான் 'ஈழநாடு' என்ற தமிழ் நாளிதழ் வெளியாகிக்கொண்டிருக்கின்றது. வேறு எந்த மொழியிலும் இலங்கையில் இதுவரை கொழும்புக்கு வெளியே எந்த நாளிதழும் வெளிவந்ததில்லை எ... குறிப்பிடவேண்டும்.

வெளிநாடுகள் ... லும் மாகாணப்ப... இன்னமும் சிறப்புற... கொண்டிருக்கின்றன... றுக்குப் பொதுமக்க... தகர்கள் மட்டுமல்ல... கமும் உதவியும் ... அளித்து வருகின்றன...

'ஈழநாடு' பத்தி... பொறுத்தவரையில் ... பீடத்துக்கு வந்த ... கங்கள் எவ்விதஉ... ஊக்கமோ "அளி... யென்பதை வருத்... தெரிவித்துக்கொள்... யிருக்கின்றது.

ஈழநாடு வாழ... வளர வேண்டுப... ஆசீவத்துடன் பல... கத்தில் பங்கு கொ... வியும் ஒத்துழைப்...

# பாலைவனத்துப்

ஒரு ராஜ்யத்தை ஆட்சி செய்வதை விரும்புவாயா அல்லது பத்திரிகாசிரியனாயிருக்க விரும்புவாயா என்று என்னைக் கேட்டால் பத்திரிகாசிரியனாயிருக்கவே விரும்புவேன் என்று நெப்போலியன் கூறியதாகக் கேட்டிருக்கின்றேன். பின்னர் பிரஞ்சு தேசத்தின் மன்னனாகத் திகழ்ந்த அவன் பத்திரிகையை ஆண்டதாகக் கேள்விப்பட்டதில்லை. அவன் பத்திரிகை நடத்தியிருந்திருந்தால் நூறு ஆண்டுகளின் பின்னரே பிரஞ்சு ... அவனுக்குச் சிலை எழுப்பவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கலாம்.

நெப்போலியனைப் போன்று பத்திரிகையின் சக்தியைப் பற்றி யாழ்ப்பாணத்தில் உணர்ந்தவர்கள் க. சி. தங்கராசா, க. சி. சண்முகரத்தினம் அவர்கள். இச்சகோதரர்களின் ஆசை 'ஈழநாடு' பத்திரிகையாக யாழ்ப்பாணத்தில் மலர்ந்தது. வள்ளுவனின் குறளைப் போன்று அமைப்பில் சிறிதாயினும் 'ஈழநாடு' பத்திரிகை இன்று எங்கும் மணம் பரப்பி நிற்கின்றது. ஒவ்வொரு தமிழர் நெஞ்சிலும் 'ஈழநாடு' ஆழப்பதிந்துள்ளது. சில தினங்களின் முன்பு 'ஈழநாடு' காரியாலயத்திற்கு வந்து பேசிய முதியவர் ஒருவர், யாழ்ப்பாணத் தமிழர்களின் 'பெட் கொபி' (Bed cofee) 'ஈழநாடு' என்று சொல்லிப் பெருமைப்பட்டார்.

இன்று இருபதாவது வயதில் காலெடுத்துவைக்கும் 'ஈழநாட்டின்' வளர்ச்சிக்கு இறைக்கப்பட்ட வியர்வை, பணம், சிரமம் கொஞ்சநஞ்சமல்ல.

டாக்டர் க. சி. சண்முகரத்தினம் இன்று நம் மத்தியில் இல்லை. டாக்டர் அவர்களின் வாழ்வு பாதியில் முடிந்ததற்கு 'ஈழநாடு' பற்றிய ஓயாத சிந்தனையும் உழைப்பும் ஒரு காரணமாயிருக்கும் என்று துணிந்து கூறலாம். இன்றும் இதன் வளர்ச்சிக்கு அன்னாரின் ஆத்மா தோன்றாத்துணையாயிருந்துவருகிறதென்றே நம்பலாம்.

வைத்தியத்துறையில் டாக்டர் அவர்கள் எத்தனை அக்கறை செலுத்தினாரோ, அதனிலும் மேலாக 'ஈழநாடு' மீது அவர் அக்கறை செலுத்தினார். இரு துறையும் அவர் உயிரும் உடலுமாயிருந்தன. அதனால் இன்று இவ்விருதுறையும் துலங்கும் நிலையில் டாக்டர் அவர்கள் இறந்தும் இறவாதவரே.

'ஈழநாடு' பற்றி எழுதும் போது டாக்டர்பற்றியே எழுதவருவது இயல்பு. தமிழினின்றும் சைவத்தைப் பிரிக்க முடியாததுபோல.

## பாலைவனத்திலே பயிர் செய்யலா...

பாலைவனத்திலே ... யலாம் என்பதில் இ... களைப் போன்று ... ஸ்தாபனத்தின் ... களும் நம்பிக்கையு... யிருந்தனர். இ... சொல்லுகின்றேனெ... பாலைவனத்திலே ... வது போன்ற ப... ... பத்திரிகை ... வதும் தினபத்திரி... நடத்துவதென்பது... யாழ்ப்பாணத்தில் ... ரிகை நடத்துவதெ... இலேசுப்பட்ட ... இத்தொழிலில் ... இதிலுள்ள கஷ்டங்... வர்.

ஒரு தினசாிய... தற்கு என்ன வசதி... டும்? இதுபற்றி எ... ருல் மிக மிக நீளு... பத்திரிகை என்றது... வரும் அச்சடிக்கின்... சச இயந்திரம், ... இயந்திரம் உட்பட... மான சாதனங்க... களும் வாகனங்களு... குத் தேவை. ரோ... திரம் சில மணி ... பல்லாயிரம் பத்... அச்சிடவல்லது, ... டர்மூலம் உடனுக்... திகள் கிடைக்கின்... சோபலட்சத்தை ... அதன் வளர்ச்சிக்... யாக்கிக்கொண்ட... இதுவரை அது ... இயந்திரவகைகளை... ருக்கவில்லை, இது... திரிகைக்குக் கவர்... னும் தருவனவாய... எமது "ஈழநாட்டி... பெறுவதற்கு எப்... 'புளக்'குகள் செய்... திரசாதனங்க... துரித விநியோகத்... யாவசியமான வ... கள் இருக்கிறதா ... அதுவுமில்லை.

## வேறென்ன உ...

அப்படியானால் ... உண்டு?

சாதாரண ... தைக் கொண்ட... ஸ்தாபனம், ஆத்... லும், மனோ ப... வாசக அன்பர்களி... பலத்திலும், ஊ... சேவை நலத்தி... ந்த பத்தொன்ப...

# 'ஈழநாடு'

ல்லை யென்பதைக்
ண்டும்.

கள் பலவற்றி
ணப்பத்திரிகைள்
றப்புறவெளிவந்து
கின்றன. அவற்
துமக்கள் வரித்
டுமல்ல அரசாங்
யும் ஊக்கமும்
ங்கின்றன.

பத்திரிகையைப்
ரையில் ஆட்சி
வந்த அரசாங்
வ்விதஉதவியோ
'அளிக்கவில்லை.
வருத்தத்துடன்
கொள்ள வேண்டி
.

வாழவேண்டும்
வண்டும் என்ற
ன் பலர் நிர்வா
த கொண்டு உத
ழைப்பும் அளிக்க

முன்வந்தனர்.

சிலர் சிறிது காலம் மட்டுமே 'ஈழநாடு' குடும்பத்தில் அங்கம் வகித்துவிட்டுச்சென்றலும் அவர்களும் 'ஈழநாடு' மீது கொண்டுள்ள பற்றையும் பாசத்தையும் முற்றாகத் துறந்து விடவில்லை.

'ஈழநாடு' ஒரு குடும்பம் அது வெறும் குடும்பச் சொத்து அல்ல.

'ஈழநாடு' தமிழ்ப்பேசும் சமுதாயத்தின் ஈழத்திருநாட்டின் குடும்பச்சொத்து.

இருபது வருடங்களாகப் பேணிக்காத்த பேருமை சமுதாயத்துக்கே உரியது.

இனியும் இதை சிறப்புறப் பேணிக்காக்கவேண்டிய பெருமையும் கடமையும் இதே சமுதாயத்தையே சார்ந்திருக்கின்ற தென்பதையும் நன்றியுடன் சொல்லிக் கொள்ள விருப்புகின்றேன்.

# ...ப்பயன் மரம்

பால.

த்திலே
ய்யலாமா?

த்திலே பயிர் செய்
பதில் இஸ்ரேலியர்
று 'ஈழநாடு'
ன் ஸ்தாபகர்
க்கையுடையவரா
இதனை ஏன்
றேன் என்றால்,
திலே பயிர் செய்
பிரயத்தனம்
ப்பாணத்தில் ...
... நடத்து
பத்திரிகையொன்றை
ன்பதும் அதுவும்
த்தில் தினப்பத்தி
துவதென்பதும்
காரியமல்ல
... ருரே
... ங்களை உணர்

சாலை ஆரம்பிப்ப
ன வசதிகள் வேண்
ற்றி எழுதுவதென்
கை நீளும். செய்திப்
என்றதும் நினைவில்
டிக்கின்ற இராட்
ரம், டெலிபிரின்ட்
உட்பட ஏராள
னங்களும் ஆட்
னங்களும் இதற்
. ரோட்டரி இயந்
மணி நேரத்தில்
பத்திரிகைகளை
து. டெலிபிரின்
டனுக்குடன் செய்
டக்கின்றன. லட்
த்தை 'ஈழநாடு'
ர்ச்சிக்குப் பசளை
ண்டபோதிலும்
அது இத்தகைய
களைப் பெற்றி
இதுதவிரப் பத்
கவர்ச்சியும் பய
னவாய படங்கள்
நாட்டில்' இடம்
எம்மிடம் பட
செய்யும் இயந்
ங்களும் இல்லை.
யோகத்திற்கு அத்தி
வாகன வசதி
கிறதா என்றால்
.

...ன உண்டு?

ஆனல் வேறென்ன

ரண ஒரு அச்சகத்
காண்ட ஈழநாடு
. ஆத்ம பலத்தினு
ளே பலத்தினுலும்,
பர்களின் ஆதரவுப்
லும், ஊழியர்களின்
லத்தினுலுமே கட
தான்பது ஆண்டு

களில் இத்தனை வளர்ந்து தலைநகரிலிருந்து வெளிவரும் பத்திரிகைகளும் வியக்கும் வண்ணம் மக்கள் மத்தியில் செல்வாக்கைப் பெற்று இன்று இருபதாவது ஆண்டில் அடி வைக்கிறது.

சேட்டபோதெல்லாம் [illegible] அவுட் ஒவ் [illegible] என்றும் ஏழெட்டு மணித்தியாலங்கள் தாமதமென்றும் [illegible] சொல்லக் [illegible] டெலிபோன் [illegible] 'உதவி' [illegible] முறைவான வசதி [illegible] 'ஈழநாடு' பத்திரிகை தலைநகரிலிருந்து வெளிவரும் வசதி படைத்த தனது சகோதரப் பத்திரிகைகளுக்கு ஈடு கொடுத்து —சில சமயங்களில் அவற்றுக்கும் மேலாக —செய்திச் சேவை ஆற்றிவருவது ஈழநாடு வாசகர்களுக்கும் அதன் வளர்ச்சியில் அச்சாணியாக விளங்கும் விளம்பரதாரர்களுக்கும் பெருமைதரும் விஷயமாகும். மேலும் இது வளர்ந்து சகல வசதிகளும் பெற்ற ஒரு நிறுவனமாய்த் திகழ்ந்து செய்திச் சேவையில் மேலும் முன்னணி வகிக்க, எல்லாம் வல்ல இறைவனின் கடாட்சமும், வாசகப் பெருமக்களின் ஆசியும் என்றென்றும் கிடைக்கும் என்றே நம்புவோம்.

—சசிபாரதி

## வாழ்த்துரை

பலதுறைப்பட்ட பல்வேறு விஷயங்களை,
அவ்வத்துறை கைவந்தோர்
மதிக்கத் தக்க வகையில்,
உடனுக்குடன் விரைந்து
வெளியிட்டு வருவது
ஈழநாட்டின் விசேட சிறப்பு.

ஒளி முன்னேவரும் ஒலிபின்வரும்,
ஜனநாயக உலகம், முழக்கத்தைக்
கேட்பதற்கு முன்னரே,
மூலை முடுக்குகளில் நடந்த
இரகசியங்களைக் கூடச்
சுடச்சுட
மின் வேகத்தில் தந்துவிடுகின்றது
ஈழநாடு,
இதன் வேகம் இருந்தவாறு!

''ஈழநாடு தன் இருபது யாண்டு
இளநலச் செவ்வி
மேன்மேல் வளர்ந்து
பிரகாசிப்பதாக'' என்று
பல்லாண்டு கூறி
வாழ்த்துவோமாக.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை.
9-2-1978.

# அகிம்சையும் சத்தியமும்

1927ம் வருடம் மகாத்மா காந்தி இலங்கைக்கு வருகை தந்தபோது அகிம்சையையும் சத்தியத்தையும் வற்புறுத்தி, ஈழத்தின் விடுதலைக்கும் வித்திட்டார்கள். நானூறு ஆண்டு காலத்துக்குமேல் அந்நியர்களுக்கு அடிமைப்பட்டிருந்த ஈழம், மகாத்மா செய்த தவவலிமையால் 1948ம் ஆண்டு விடுதலை அடைந்தது அதே அகிம்சையையும் சத்தியத்தையும் ஆயுதங்களாகக் கொண்டே, கிடைத்த விடுதலையை பலப்படுத்தி, நாட்டை முன்னேற்ற முடியுமென்றும் அறிவுறுத்தி அதற்காகத் தம் உயிரையும் தியாகம்செய்து மறைந்தார்கள்.

[கே. பி. ஹரன்]
நிர்வாக ஆசிரியர்

அந்த உபதேசத்தை [illegible] துரதிருஷ்ட வசமாக இந்தியாவும் இலங்கையும் மறந்தன. புதிதாகக் கிடைத்த சுதந்திரத்தை துஷ்பிரயோகம் செய்தோம். ஈழத்துக்குக் கிடைத்த சுதந்திரம் ஒருபகுதியாருக்கு இல்லை என்று மறுக்கப்பட்டது. தமிழர்கள் ஏமாற்றமடைந்தனர். உள்நாட்டுக் கலவரங்கள் கிளம்பின. அமைதி இல்லை நாடும் முன்னேறமுடியவில்லை. வன்செயல்கள் அதிகரித்தன. இன்று வாலிபர்கள் மனமுடைந்து தங்கள் விமோசனத்துக்கு, பொருளாதார விடுதலைக்கு வன்செயல்கள் தான்வழி செய்யுமென்று கருதக்கூடிய நிலையில் உள்ளனர் பொதுவாக நாட்டில் வன்செயல்கள் அதிகரித்து மக்கள் நிம்மதியாக வாழமுடியாமல் தவிக்கக்கூடிய ஆபத்தும் அதிகரித்துள்ளது.

மகாத்மா கூறிய அகிம்சை, சத்தியம் இவ்விரு வேதவாக்கியங்களையும், அரசாங்கமும் அரசியல் தலைவர்களும், பொது மக்களும் நினைவுகூர்ந்து அவற்றைக்கடைப்பிடித்தாலே நாட்டுக்குவந்துள்ள ஆபத்து நீங்கும். நாடு பெற்றுள்ள சுதந்திரமும் பாதுகாக்கப்படும். இன்றேல் நாம்பெற்ற சுதந்திரத்தையும் இழந்துவிடக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிடக்கூடும்.

நல்லவேளையாக, காந்தியக் கொள்கையை, இந்தியாவின் புதிய அரசாங்கம் வற்புறுத்தி வருகிறது. இந்திய அரசாங்கத்துக்கும் இலங்கை புதிய அரசாங்கத்துக்கும் சிறந்த நல்லுறவுகள் பலப்பட்டு வருவதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. அமைச்சர் சரண்சிங் தலைமையில் ஒரு பலத்த நல்லெண்ண கோஷ்டியை இந்திய பிரதமர் ஈழத்து சுதந்திர விழாவுக்கு அனுப்பிவைத்துள்ளது இரு நாடுகளின் எதிர்கால நல்லுறவுக்கும், காந்திய தத்துவங்கள் காட்டும் வழியில் நம் நாடு முன்னேறவும் செய்யுமென்றும் நம்பிக்கை அளிப்பதாக இருக்கிறது.

காந்திய தத்துவங்களிலிருந்து விலகியதால்தான் இருநாடுகளுக்கும் பல ஆபத்துக்களும் இன்னல்களும் ஏற்பட்டன. இரு தேசங்களும் தாங்கள் பட்டஅனுபவங்களை உணர்ந்து தக்க பாடங்கள் கற்று பரஸ்பரம் ஒத்துழைத்து முன்னேறவும், தவறுகளைச்சுட்டிக்காட்டவும் செய்ய வேண்டிய பணிகள்; அதிகமுள்ளன. தமிழர்களுக்குச் செய்யப்பட்டுவிட்ட இன்னல்களைத் தீர்க்கவும், மக்கள் அமைதியாக முன்னேறவும் செய்ய வேண்டிய பணிகள் அதிகமுள்ளன.

சென்ற பத்து ஆண்டுகளில் பல பல ஆபத்துக்கள் ஏற்படுமென்று யோகசுவாமிகள் எச்சரித்தார். 'ஏசுவார்கள் எதிர்ப்பார்கள் அஞ்ச வேண்டாம். உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்' என்று ஆசி கூறிஞர்கள்; சுவாமிகள் கூறியதுபோல் பத்திரிகாலயத்தில் குண்டும் விழுந்தது. எவ்வளவோ சேதனைகள் எல்லாம் ஏற்பட்டன. சென்ற 19 ஆண்டுகளாகப் பத்திரிகை தொடர்ந்து வெளிவர முடிவதை நினைக்கத்தான் வியப்பாகவுள்ளது. பெரியவர்கள் கூறிய ஆசி மொழிகள் தான் இதற்குக்காரணமென்று நம்பவேண்டியுள்ளது. பெரியோர்களின் ஆசியும் பொது மக்களின் நல்வாழ்த்துக்களும் வெறும் அர்த்தமற்ற வார்த்தைகள் அல்ல. நம்பினோர் நலமடைவர்; இது நான்கு மறைத்தீர்ப்பு. அந்த ஆசிகளையும் வாழ்த்துக்களையும் நிதியங்களாகக்கொண்டு தன் இருபதாம் பிராயத்தில் நம்பிக்கையுடனும் பணிவுடனும் 'ஈழநாடு' அடி எடுத்துவைக்கின்றது.

## ஒரு பத்திரிகையாளரின் பாராட்டு

['டைம்ஸ் ஒவ் சிலோன்', 'டெயிலி மிறர்', 'சன்' ஆங்கிலத் தினசரிகளில் நிருபராகவும், உதவி ஆசிரியராகவும், செய்தி ஆசிரியராகவும் பணியாற்றி, பின்னர் சொந்தமாகவே 'சந்தேஸ' என்னும் செய்திச்சேவையை நடாத்திவரும் திரு. காமினி நவரத்ன, பல வெளிநாட்டுப் பத்திரிகைகளுக்கு இலங்கையின் நிருபருமாவார். 'ஈழநாடு, பத்திரிகையுடன் நீண்ட காலத் தொடர்பு கொண்ட பத்திரிகையாளரான அவர் அனுப்பிய பாராட்டுச் செய்தி இது.] ஆ-ர்.

பத்து ஆண்டுகளுக்கு மேலாக 'ஈழநாடு' பத்திரிகையின் கொழும்பு நிருபராகத் தொடர்புடைய பத்திரிகையாளன் என்ற வகையில் அதன் 20வது ஆண்டு ஆரம்பத்தையொட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கியபோதிலும், யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் ஒரே பத்திரிகை என்ற வகையில் தனித்துவத்துடன் 'ஈழநாடு' தலைநிமிர்ந்து நிற்கிறதென்றல் அதன் நிர்வாகத்தையும், ஆசிரியர் குழாத்தையும் பாராட்டவேண்டும்.

தமிழ் மக்களின் சட்ட பூர்வமான அபிலாஷைகளைப் பிரதிபலிப்பதில் ஈழநாடு எப்பொழுதுமே முனைந்து செயல்பட்டுவந்துள்ளது. இதனல் அதிகார வர்க்கத்தினரின் கோபத்துக்கும் உள்ளாக நேர்ந்ததுண்டு.

விளம்பரங்கள் வழங்குவது, அணி சேரா உச்சி மாநாடு உட்பட முக்கியமான பல நிகழ்ச்சிகளுக்குப் பத்திரிகையாளர் நுழைவு அனுமதி வழங்குவது போன்ற விஷயங்களில் முன்னைய அரசினல் 'ஈழநாடு' பத்திரிகை எந்த அளவில் புறக்கணிக்கப்பட்டுவந்தது என்பது எனக்குத் தெரியும். அரசுகள் வரும்போகும். ஆனல் ''ஈழநாடு தொடர்ந்து நடைபோடும் என்பது உறுதி.

'ஈழநாடு' பத்திரிகையின் பிறந்த நாளுக்கான எனது வாழ்த்தும் ஆசியும் இதுதான்.

—காமினி நவரத்ன

## A Journalist's good wishes......

As a journalist who was associated with the Eelanaadu for over a decade. as its Colombo correspondent. I am very happy to send this message of greetiug on the Commencement of the 20 th year of publication. redounds to the credit of both the management and the Editorial staff that, despit many handicaps, the Eelanaadu has been able tohold its own for so long as the only Tamil national newspaper to be published from Jaffna

The Eelanaadu has always endeavoured to reflect the legitimate aspirations of the Tamil people, sometimes even at the risk of incurring the displeasure of the powers that be.

I well remember how i was blacklisted by the las government where advertising was concerned and also in the issue of press passes to cover a number of important events, including the Nonaligned Summit.

Goverments come and go, but the Eelanaadu appears set to go on...... for ever!

That is my birthday wish and hope for the Eelanaadu.

Gamini Navratna.

# இன்று நடப்பவை

(யாழ்ப்பாணம்)

இணுவில் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் கோவில் பஞ்சமுக விநாயகர் பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகத்தின் முதலாவது ஆண்டு பூர்த்தி விழா இன்று நடைபெறவிருக்கிறது.

செல்வி புஷ்பா செல்வநாயகம், திரு. ச. விநாயகமூர்த்தி பிரம்மஸ்ரீ நியாயசிரோன்மணி ஐயர் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்துவர்.

மேளக் கச்சேரிகளும், வில்லிசையும் நடைபெறும். [உ]

0 0 0

### குற்றத்தடுப்புக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

குற்றத்தடுப்பு தொடர்பான பகிரங்கக் கூட்டம் ஒன்று இன்று மாலை தெல்லிப்பளை அண்ணமார் கோவில் முன்றலில் கோவில் பரிபாலனசபை நிர்வாகி திரு கே. வேலாயுதம் தலைமையில் நடைபெறவிருக்கிறது,

சுன்னுகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. தாமோதரம்பிள்ளை தெல்லிப்பளை தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கப் பொதுமுகாமையாளர் திரு. எஸ். தங்கவடிவேல், வலி-தெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. இ. குமாரசாமி, யாழ். பொலிஸ் அதிபர் திரு. டக்ளஸ் றன்முத்துகல, காங்கேசன்துறை ஏ. எஸ். பி. திரு. நிமால் சில்வா முதலியோர் உரையாற்றுவர். (உ)

0 0 0

### திறப்பு விழா

[யாழ்ப்பாணம்]

நாரந்தனை வடக்கு 9 ம் கட்டையில் இன்று சனிக்கிழமை பிற்பகல் அகில இலங்கை தேசிய வைத்திய சங்கத்தினரால் 'லைடன் வைத்தியசாலை' திறந்துவைக்கப்படவுள்ளது.

வைத்தியசாலையை வண. பிதா. குறாஸ் திறந்துவைப்பார். பிரதம விருந்தினர்களாக வைத்திய கலாநிதிகள் எஸ். பி. ஈ. இன்னாசித்தம்பி, என். பி. அத்தனாசியார், ஆ. நடராசா ஆகியோர் கலந்து கொள்வர். திரு. ச. அருமைநாதன், டாக்டர்கள் வி. கே. விஸ்வலிங்கம், சி. கி. இராசரத்தினம், ரி. தர்மதுரை, பொ. இராமநாதன், க. சிற்றம்பலம், திரு. கு. விநோதன், திரு. எஸ். கே. மகேந்திரன் உட்பட பலர் வாழ்த்துரை வழங்குவர். கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். [கெ-அ]

0 0 0

### சுற்றுப்போட்டி ஆரம்பம்

[கரணவாய்]

கரணவாய் வடக்கு நியூட்டன்ஸ் விளையாட்டுக் கழகம் தனது முதலாவது கிரபந்தாட்டச் சுற்றுப் போட்டியை இன்று 11ம் திகதி முதல் நடாத்தவுள்ளது. இச்சுற்றுப் போட்டியில் பத்துக்கு மேற்பட்ட விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றுகின்றன. [அ]

# "மக்களின்கவனத்தை திசை திருப்பமுயல்கிருர் இந்திரா"

## பிரமானந்த ரெட்டி கண்டனம்

புதுடில்லி, பெப். 10

"நெருக்கடிகால முறைகேடு கள் பற்றி விசாரணை நடாத்தி வரும் ஷாகமிஷன் முன்னிலையில் தமது தவறுகள் வெட்ட வெளிச்சமாகி வருவதனுல் மக்களின் கவனத்தைத் திசை திருப்புவதற்காகக் கட்சியிலேயே பிளவை ஏற்படுத்தி விட்டார் திருமதி காந்தி" இவ்வாறு காங்கிரஸ் தலைவர் திரு. பிரமானந்த ரெட்டி திருமதி காந்தி மீது குற்றஞ் சாட்டிஞர் திருப்பதியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் அவர் பேசுகையில் மேலும் கூறியதாவது:

"நெருக்கடி கால வேளை திருமதிகாந்தி இழைத்த தவறுகள் பல் ஊழல்கள்பல அவ் வேளை இடம்பெற்றன. ஷா கமிஷன் முன் இவை அம்பலமாகி வருகின்றன.

மக்கள் தமது தவறுகளை அறிந்து கொள்வதால் ஏற்படக் கூடிய விளைவுகளை எண்ணி திருமதி காந்தி காங்கிரஸ் கட்சியைப் பிளவுபடுத்தி மக்களின் கவனத்தைத் திசை திருப்ப முனைந்துள்ளார் ஆட்சிக்காலத்தில் அவர் தமது இஷ்டப்படியே நடந்து வந்தார், நாட்டுநலன், மக்கள் நலன் எவை பற்றியுமே அவருக்கு அக்கறை இருக்கவில்லை" [உ]

காங்கிரஸ் பிளவு:

## '1969-ம் ஆண்டிலேயே இந்திரா வித்திட்டார்'

### — பிரதமர் தேசாய்

பம்பாய், பெப். 10

"திருமதி இந்திரா காந்தி காங்கிரஸ் கட்சியைப் பிளவுபடுத்தும் நடவடிக்கையில் 1969ம் ஆண்டில் இருந்தே ஈடுபட்டுவிட்டார்" என்று பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய் கூறினர். பம்பாயில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு சொன்னர்.

பிரதமர் மேலும் பேசுகையில், எதையும் தமது விருப்பப்படியேசெய்யும் மனப்போக்குள்ளவர் திருமதி காந்தி, அவர் சர்வாதிகார நினைப்புத்தான் பல இன்னல்களுக்கும் காரணமாயிருந்தது" என்ருர். [உ]

## 'அமிர்' உறுதி

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி அகதிகள் முகாமில் உள்ள 25 குடும்பங்கள் இந்தியாவுக்குச் செல்வதில் உள்ள கஷ்டம்பற்றி எதிர்க் கட்சித்தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

தாம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேசி ஆவன செய்வதாக திரு. அமிர்தலிங்கம் உறுதியளித்துள்ளார்.

# களங்கம் கற்பிக்க முயற்சியா நடக்காது என்கிருர் இந்திரா

புதுடில்லி, பெப். 10

"நாட்டு மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டும் என்பதே என் குறிக்கோள் மக்கள் என் மீது வெறுப்புக் கொள்ள எடுக்கப்படும் முயற்சிகள் பயன்தரா" என்று பாரத முன்னுள் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி தம்மீது எதிர்க்கட்சியினரால் சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளுக்கு மறுப்புத் தெரிவித்து நிருபர்கள் மத்தியில் பேசுகையில் கூறினர்.

"ஆட்சிப் பொறுப்பைஏற்று மாதங்கள் பலவாகியும் ஜனதா கட்சி மக்களுக்கு உருப்படியாக எதையுமே செய்யவில்லை. விலைவாசிகள் உயர்கின்றன.

மக்கள் தம்மீதுகொண்டுள்ள வெறுப்பைப்போக்கிக்கொள்ள நன்மைகள் செய்யாமல் வீணே என்னை ஜனதாக் கட்சியினர் திட்டித் தீர்ப்பதில் நியாயம் என்ன இருக்கிறது? என்ருர் திருமதி காந்தி. [உ]

# தமிழ்க் காங்கிரஸை—

[3ம் பக்கத் தொடர்ச்சி]

படுத்தி வெற்றி கண்டவர்கள் சிங்களத் தலைவர்கள் என்பதை இந்த உரை நினைவூட்டுகின்றது. டொனமூர் அரசியல் திட்டம் நிறைவேறுவதற்கு மட்டக்களப்புப் பிரதிநிதி ஈ. ஆர். தம்பிமுத்துவும், சோல்பரி அரசியல் திட்டம் நிறைவேறுவதற்கு மன்ஞர், மூலைத்தீவுப் பிரதிநிதிகளும் கைகொடுத்துள்ளனர்.

"இப்படியாகச் சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பயன்படுத்தி வெற்றிகண்ட சிங்களத் தலைவர்களின் ராஜதந்திர சூழ்ச்சிகளிலிருந்து தமிழ்மக்களைப் பாதுகாப்பதற்காகவே அமரர் ஜி. ஜி. சமபலப் பிரதிநிதித்துவத்தைக் கோரினர். ஆனல் கடைசி வரை 45 ஆண்டுகள் தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்காகப் பாடுபட்டார். கடைசியில் தமிழினத்தின் விடுதலை ஒற்றுமையென்ற விடுதலைப் போராட்டத்தின் மூலம் காணமுடியுமெனக் கருதிக் கூட்டணியில் பிரதிநிதித்துவம் பெற்ருர்.

"அன்ஞர் விட்டுச் சென்ற ஒற்றுமையின் அடிப்படையிலே 18 தொகுதிகளில் தமிழர் விடுதலைக் கூட்டணி வெற்றிபெற்றது. துரதிர்ஷ்டவசமாக ஒரு தொகுதியை இழக்கநேரிட்டது தாம் கொண்டிருக்கும் ஒற்றுமை குலையாமல் எமது இலட்சியம் வெற்றி பெறும்வரை, போராடுவதே அன்னருக்கு நாம் செலுத்தும் அஞ்சலியாகும்."

### பணமுண்டானல் சிலை நிறுவலாம்

நல்லூர்த் தொகுதி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் பேசுகையில், "ஒன்றுபட்ட தமிழினத்தைக் கூறுபோட்டு அரசியல் லாபந் தேடுவதற்காகச் சிலர் சதி செய்கின்றனர். இந்த ஒற்றுமையை ஒருபோதும் பிரிக்கமுடியாது; அது இளைஞர் கைகளிலேயே உள்ளது. பணமிருந்தால் சிலை நிறுவலாம். ஆனல் அன்னரின் இலட்சியங்களைப் பேணுவதுதான் இன்று முக்கியம். அன்ஞர் விட்டுச் சென்ற ஒற்றுமை, சுதந்திரம் தன்மானம் ஆகிய கோட்பாடுகளைப் பேணுவதுதான் முக்கியம்" என்ருர்.

அவர் மேலும் பேசுகையில், கூறியதாவது:

"இன்று மறைந்த தலைவர்களின் வாரிசு யாரென்ற கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. எங்கள் தலைவனும் உங்கள் தலைவனுமான அமிர்தலிங்கம் தான் வாரிசு. அவரின் தலைமையில் இன்று ஏற்பட்டிருக்கும் அரசியல் நெருக்கடியிலும் இலட்சியம் வழுவாது போராடுவோமென மறைந்த தலைவர்கள் மீது ஆணையாகக் கூறுகிறேன்".

மன்ஞர் எம்.பி. திரு. சூசைதாசன் பேசுகையில்,

மாவட்ட மந்திரி பதவிகளை கூட்டணி ஒருபோதும் ஏற்கமாட்டாது. இலங்கையைப் பொறுத்த வரையில், ஒருகட்சி ஆட்சிமுறை கொண்டுவரப்படுகின்றது. ஸம்பியா, உகண்டா, மொராக்கோ தேசத்தில் உள்ள ஆட்சியைப்போல, ஜனதிபதியின ஆட்சி கொண்டு வரப்பட்டுள்ளது, இந்நிலையில் மாவட்ட அமைச்சர்களுக்கு அதிகாரம் கிடையாது. கடந்த 30 ஆண்டுகள், தமிழ் அமைச்சர்கள் சாதிக்காத அபிவிருத்தி திட்டங்களை, அதிகாரமற்ற மாவட்ட அமைச்சர்கள் நிறைவேற்ற முடியுமா, இன்று 10 லட்சம் ரூபாய்களை அரசாங்கபிச்சையாக வாங்கி அவர்களின் கைப் பொம்மைகளாக முடியுமா. மகாவலி திசைதிருப்புவதும் தமிழருக்கு ஆபத்து. மன்ஞரில், 36,000 ஏக்கரும், மட்டக்களப்பில் 16,000 ஏக்கரும் வனம் கொளிக்கும்போது, தமிழ்ப் பகுதியில், தமிழ் மக்கள் குடியேறி இருக்கவேண்டும், இல்லையேல் சிங்கள குடியேற்றம் நடைபெறும்." என்ருர்.

திருமதி மங்கையர்கரசி அமிர்தலிங்கம் பேசியதைத் தொடர்ந்து,

### போராட்டம் தொடரும்

வவுனியா எம்.பி.ரி.சிவசிதம்பரம் பேசுகையில், "எமது போராட்டம், தமிழ் ஈழ விடுதலைக்கு மிக நெருக்கமாக வந்து கொண்டிருக்கின்றது. அண்மையில் ஏற்பட்ட இனக்கலவரங்களினுல், எமது இயக்கம் பின்நின்றுலும், இனி வேகமாக செயல்படவேண்டும்" என்ருர். ஒவ்வொரு இளைஞர்களும் முதியவர்களுக்கும் தியாகம் உருவாக்க வேண்டும். நமது தலைவர்கள் விட்டுச் சென்ற ஒற்றுமையை மேலும் நெருக்கமாக்கிக் கொண்டு எமது. இலட்சியத்தை வெல்ல வேண்டும்" என்ருர்.

### வரலாற்றுப் புருஷர்

கம்யுனிஸ்ட் பிரமுகரும், செந்தமிழர் இயக்கச் செயலாளருமான திரு. வி. பொன்னம்பலம் பேசுகையில் "அமரர் ஜி ஜி.பொன்னம்பலம் வரலாற்றுப்புருஷர், ஆனல் அவருடைய வரலாறுகளை, நிச்சயமாக ஆராயவேண்டியதுகடமை. அதற்கு ஏற்ற இடம் யாழ் வளாகம்" என்ருர்.

### சாதிக்கு சாவுமணி

உடுப்பிட்டி எம். பி. த. இராஜலிங்கம் பேசுகையில்: நாம் விடுதலைபெற வேண்டுமானுல் தமிழரிடையே புரையோடிக் கொண்டிருக்கும் சாதிக்கு சாவுமணி அடிக்க வேண்டும்" என்ருர்.

வண சிங்கராயர், பருத்தித்துறை எம். பி. திரு. துரைரத்தினம், வட்டுக்கோட்டை எம். பி. த. திருநாவுக்கரசு, தா. சங்கரப்பிள்ளை, ஜனப் எஸ். எச். எம். சாகித், யாழ்ப்பாண எம்.பி.வெ.யோகேஸ்வரன் உட்பட பலர் உரையாற்றினர். [செ]

## மாநாடு


(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை ஐக்கிய சுருட்டுத்தொழிலாளர் சங்கம் கூட்டும் தொழிலாளர்களின் பிரதிநிதிகள் மகாநாடு இன்று சனிக்கிழமை மாலை நல்லூர் கல்யாண மண்டபத்தில் நடைபெறுகிறது. சுருட்டுத் தொழிலாளரின் இன்றைய நிலை, சுருட்டுத் தொழிலைப் பாதுகாப்பது முதலான விஷயங்கள் இதில் ஆராயப்படும். [அ]

இப்போது மென்மையான, செம்மையான, இதமான அநேகம் க்ஷவரங்கள் எடுப்பதற்கு

கிளஸிக் பிளேட்

(பொலிமர் பூசிய ஸ்டெய்ன்லஸ் உருக்கு)




விநியோகத்தர்கள்:
ஹவுஸ் அன்ட் புரொபர்ட்டி ட்ரேட்ஸ் லிமிட்டெட்

RAVI

# "1977 ஆகஸ்ட் கலவரத்தில் சிங்களம்படித்த; சிங்களவரை மணந்த தமிழர்களும் தாக்கப்பட்டனர்"

[யாழ்ப்பாணம்]

"சிங்களம் படித்து சிங்களத்தில் கையெழுத்திட்ட தமிழரும், சிங்களப்பெண்ணை மணந்த தமிழரும் கலவரத்தின்போது அடித்து துன்புறுத்தப்பட்டு அகதிகளாக வந்துள்ளனர். இந்த நிலையில், சிங்களமொழி படிப்பதாலும், கலப்புத் திருமணம் செய்வதாலும், பிரச்னைக்கு பரிகாரம் காணுவது பற்றி சிந்திக்கவேண்டியிருக்கிறது" யாழ்ப்பாணத்தில் நடைபெறும் சன்சோனி கமிஷன் முன் சாட்சியமளித்த எதிர்க்கட்சித்தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் நேற்று மேற்கண்டவாறு கூறினர்.

## எதிர்க்கட்சித் தலைவர் சாட்சியம்

—கா. யோகநாதன் —

சன்சோனி கமிஷன் விசாரணை ஆரம்பம்முதல் ஆங்கிலத்திலேயே நடைபெற்றுவருகிறது திரு. அமிர்தலிங்கம் ஆங்கிலத்தில் சாட்சியமளித்தபோது மேலும் கூறியதாவது;

### எம். பீ.க்கள் தொடர்பு

நான் பலாலி விமான நிலயத்திற்கு 17-ம் திகதி பின்னேரம் சென்றேன். அங்கு நின்றபோது, திரு. வி. யோகேஸ்வரனும், திரு. வி. என். நவரத்தினமும், தொலைபேசியில் தொடர்பு கொண்டு நாகவிகாரையால் வந்த இ.போ.ச. பஸ் ஒன்றை] பொலிஸார் கடத்திச் சென்றுகண்ணுதிட்டியிலுள்ள நகைக் கடையொன்றை உடைத்து நகைகளை கொள்ளையடித்ததுடன் ஒருவரை சுட்டு விட்டதாகவும் கூறினர்கள்.

விமான நிலயத்தில் கலாச்சார அமைச்சர் குருகேயையும், உதவி அமைச்சர் வேரப்பிட்டியாவையும் வரவேற்க டி. ஐ. ஜி. அனே செனரத்ன வந்திருந்தார்.

### நிலைமை மோசமாகும்

கண்ணுதிட்டி சம்பவத்தை டி. ஐ. ஜியிடம் கூறினேன் அப்படியொன்றும் நடந்திராது அது பொய், என அவர் மறுத்தார். அதன்பின் அவர் முக்கியமான குறிப்பொன்றை எனக்குச் சொன்னர். இதனை பாராளுமன்றத்திலும் கூறினேன். "இந்தக் கலவரம் அனுரந்தபுரம், குருநாகலுக்கும் பரவியுள்ளது. நாளை கொழும்பிற்கும் மற்ற இடங்களுக்கும் பரவும் 58 கலவரத்திலும் பார்க்க மோசமாக போகும்" என்று கூறினர்.

கமிஷனர்: யார் டி. ஐ ஜி?

அமிர்: திரு. அனே செனரத்ன. வட பிராந்தியத்திற்கு பொறுப்பாக இருக்கிறார். நான் அவரிடம் இவையெல்லாம் தெரிந்த நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்தீர்கள். என்று கேட்டேன். அதற்கு அவர் பதிலளிக்கவில்லை.

### அமைச்சர் வந்தார்

அமைச்சர் குருகேயும், உதவி அமைச்சர் வேரபிட்டியவும் வந்தார்கள். நான் கண்ணுதிட்டி நகைக்கடை சம்பவத்தை அவரிடம் சொன்னேன். விசாரணை செய்யுமாறு சொன்னேன்.

அன்றிரவு யாழ்ப்பாணம் இ. போ. ச. அத்தியட்சர் திரு. தியாகராசா சம்பந்தப்பட்ட பஸ் சாரதியையும், கண்டக்டரையும் கூட்டி வந்தார். அமைச்சர் குருகேக்கு முன்னிலையில் அவர்கள் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

நான் 18-ம் திகதி கொழும்பு சென்று எனக்குத் தெரிந்த விஷயங்களை பாராளுமன்றத்தில் தெரிவித்தேன். அந்த நேரம் நிலைமை மோசமாகிக் கொண்டிருந்தது.

17-ம் திகதி காயமடைந்தவர்கள் வந்து, அநுராதபுரம் ரயில் நிலயத்தில் கொள்ளையடிக்கப்பட்டதாக சொன்னர்கள்.

அனுராதபுரத்திலும், மற்ற இடங்களிலும் நடந்தவற்றை கூறுமுன் முதலில் யாழ்ப்பாணத்தில் நடந்தவற்றை கூற விரும்புகிறேன்.

எங்கள் ஆலோசனையின்பேரில் யாழ்ப்பாணத்தில் 19ம் தேதி வரை ஊரடங்கு சட்டம்போடப்படவில்லை. 19ம் தேதிமாலை நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் போடப்பட்டபோது, யாழ்ப்பாணத்திற்கும் போடப்பட்டது.

### சிலைகள் உடைக்கப்பட்டன

19ம் தேதி இரவு யாழ்ப்பாணத்திலும் ஊரடங்குச்சட்டம் போடப்பட்ட சமயம் யாழ். நகரில்நிறுவப்பட்ட தமிழ் அறிஞர்களின் சிலைகள் அடித்து நொருக்கப்பட்டது, இச்சிலைகளின்படங்களை சமர்ப்பிக்கின்றேன். யாழ்ப்பாணம் பழைய மார்க்கட், தற்பொழுது புதிய கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. அந்தப்பழையமார்க்கட் படங்களையும் சமர்ப்பிக்கின்றேன். எரிந்த மார்க்கட் அநுராதபுரத்திலுள்ள பழைய கட்டடங்கள்போல் இருக்கிறது.

அறிஞர்கள் சிலைகள் மட்டுமல்ல உரும்பராயில் நிறுவப்பட்ட சிலை ஒன்றும் முற்றாக அடித்து நொருக்கப்பட்டுவிட்டது. சில கோவில்கள் தாக்கப்பட்டதாகவும் எனக்கு தகவல் கிடைத்துள்ளது.

### கடைகள் தீக்கிரை

26ம் தேதி பஸ்நிலயத்திற்கு முன்னுல் உள்ள கடைகள் தீமூட்டி முற்ருக எரிக்கப்பட்டன.

கமிஷனர்: எப்ப நடந்தது?

அமிர்: 26ம் தேதி. இப்போ அக்கடைகள் திரும்பவும் மாநகரசபையினரால் கட்டப்பட்டுவிட்டது. இவைதான் யாழ்ப்பாணத்தில் நடந்தவை.

21ம்தேதி பிரதமருக்கு 48 மணித்தியால ஊரடங்குச் சட்டத்தின்போது நடந்த சம்பவங்கள் பற்றி எழுதிய கடிதத்தின் பிரதியை சமர்ப்பிக்கிறேன். ஊரடங்குச் சட்டம் இருக்கும்போது தாக்கப்பட்ட

[8ம் பக்கம் பார்க்க]

Regal (Jaffna) 2 nd Crowded week
Daily 4-45, 7-00 & 9-30 p. m.
Hayley Mills Hywel Bennett
in
TWISTED NERVE
(color)

RIO (Jaffna) Daily 4 Shows
2-nd Crowded week
HIGH VELOCITY
(Scope Color) (Adults)
வியட்நாம் விடுதலைவீரரின் புரட்சித் திட்டங்களுக்கு எதிராக இரண்டுகூலிப்பட்டாள வீரர் நடத்திய யுத்தம்

50-வது நாளைநோக்கி வெற்றிநடைபோட்டு ஓடுகிறுள்
ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள் (யாழ்ப்பாணம்)
முத்துராமன், ஜெயசித்திரா, சுந்தரராஜன், ஸ்ரீகாந்த்
இன்ஸ்பெக்டர் மனைவி
டைரக்ஷன் A. C. திருலோகசந்தர் M. A.
குறிப்பு: கடைசி இரு வாரங்கள் மட்டும்

2-வது வெற்றி மாதம்
ராணி (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
வி. பி. கணேஷன் — சுபாஷினி
ராம்தாஸ் — ஜெனிட்டா, நடித்த
நான் உங்கள் தோழன்
அமரர் செல்வநாயகத்தின் இறுதியாத்திரைக் காட்சியும் கதையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

ராஜா [யாழ்ப்பாணம்] தினசரி: 10-30, 2-30-6-30, 9-30
ஜெய்சங்கர் கே. ஆர். விஜயா சோ
விஜயகுமார் மனேகர்
நடித்த
அசோகா பிரதர்ஸ் வழங்கும்
அபிராமி மூவீஸ்



மேயர் மீனட்சி
ஈஸ்ட்மென்கலர்
திரைக்கதை வசனம் டைரக்ஷன்: மதுரை திருமாறன்
இசை: எம். எஸ். விஸ்வநாதன்
பாடல்கள்: கண்ணதாசன்-வாலி
ஒளிப்பதிவு: ராமச்சந்திரன்

மனேஹரா (யாழ் நகர்) தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்—விஜயலக்ஷ்மி நடித்த
வல்லவன் ஒருவன்

வின்ஸர் யாழ்ப்பாணம் தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் ரஜனிகாந்த்
எம். எஸ். விஸ்வநாத் ஸ்ரீதேவி-ஒய். விஜயா
மூன்று முடிச்சு
திரை கதை வசனம், டைரக்ஷன்; கே. பாலசந்தர்

வெலிங்டன் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
கணவன்

லிடோ (யாழ். நகர்) போன் 7693
முத்துராமன், சிவகுமார், சுஜாதா நடித்த
உறவு சொல்ல ஒருவன்
காலை 9-00 காட்சியுடன் ஆம்பமாகி தொடர்ந்து காட்சிகள் காண்பிக்கப்படும்

இப்பொழுது 2வது வாரமாக வெற்றிநடை போடுகிறது
சாந்தி (யாழ். நகர்) போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஜெமினி-சரோஜாதேவி- வாணிஸ்ரீ- நாகேஷ்
K. பாலசந்தரின்
"தாமரை நெஞ்சம்"
(புதிய பிரதி)
சிறுவர்களுக்கான ஆங்கிலப் படம் 11, 12-2-78 சனி, ஞாயிறு காலை 8-30 மணிக்கு மட்டும்
Treasure Island (Cartoon)
ஆசனங்கள் அனைவருக்கும் அரைக் கட்டணம்; பள்ளிக்கூட ஒழுங்குகளுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும்—நிர்வாகம்

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு: 2-30,
ஜெய்சங்கர் - சுஜாதா
நீ ஒரு மகாராணி

புலோலி சினிமாஸ் (பருத்தித்துறை)
தினசரி 2-30 6-30 9-45,
நினைத்ததை முடிப்பவன்

நாகம்ஸ் [சுன்னுகம்]
தினசரி: 6-45, 10-00
சிவாஜி - வாணிஸ்ரீ
சிவகாமியின செல்வன்

# தமிழர்களை கொல்லுங்கள் என்று சிவில் உடையில் இருந்தவர்கள் கத்தினர்

(7ம் பக்கத் தொடர்ச்சி)

தாக, கண்டி, காலி, வத்தளை மற்றும் பல இடங்களிலிருந்து தகவல் கிடைத்தது. தொலைபேசி மூலம் கூறினார்கள் நான் கடிதத்தை திரு. உருத்திரமூர்த்தி மூலம் கொடுத்தனுப்பினேன் பல சம்பவம் பற்றி கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேன் அக்கடிதத்தில் "நாட்டில் சட்டம் இல்லை. பல கொள்ளை கொலை நடந்துள்ளது என்று எழுதினேன். கொழும்பு ஸ்ரோஸ், வெள்ளவத்தையில் ஒருகடை, நுகேகொடையில் 3 கடை, தமிழ் உத்தியோகத்தர்கள் தாக்கப்பட்டனர். ஈறற்ப் பெரியகுளத்தில் ஆசிர்வாதம் கொலை செய்யப்பட்டார், வவனியாக் கிராமங்கள் தாக்கப்பட்டன, யாழ்ப்பாணத்தில் கடைகள் கொள்ளையடிக்கப்பட்டன. நாட்டில் பல தமிழ் கடைகள் கொள்ளையடிக்கப்பட்டன. பல தமிழ் உயிர்கள் பலியாகி வருகின்றன. மணிக்குமணி நிலைமை மோசமாகி வருகின்றது''. இப்படி அக்கடிதத்தில் எழுதினேன்.

## இராணுவம் சுடவில்லை

கொள்ளை நடந்தபோது இராணுவம் சுடாமல் சும்மா பார்த்துக் கொண்டிருந்தனர். 58-ம் ஆண்டின் போது 2-ம் நாள் கலவரம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. உங்கள் ஆட்சி ஏற்பட்டு ஒரு மாதத்தில் இக்கலவரம் ஏற்பட்டுள்ளது. இதற்கு நடவடிக்கை எடுங்கள் யாழ்ப்பாணத்தில் ஒரு சிங்கள மகனும் தாக்கப்படவில்லை என்றும் அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேன்.

யாழ்ப்பாணத்தில் ஒரு சிங்களவராவது முழுக்கலவரத்தின் போதும் தாக்கப்படவில்லை.

## அனுராதபுர கலவரம்

அனுராதபுரத்தில் கலவரம் ரயில் நிலையத்தில் நள்ளிரவில் ஆரம்பமானது. கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் செல்ல வந்த ரயில் அனுராதபுரத்தில் நின்றது.

கமிஷனர்: எத்தனையாம் திகதி நடந்தது.

அமிர்: 16-ம் திகதி இரவு யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற ரயில் அனுராதபுரத்தை அடைந்ததும், சிவில் உடையிலிருந்த பொலிஸார் எனச் சந்தேகிக்கப்படும் சிலர் ஓடோடி சென்று "யாழ்ப்பாணத்தில் சிங்களவரை தாக்குகிறார்கள், தமிழர்களை கொல்லுங்கள்'' என்று சத்தமிட்டார்கள். ஒரே நேரத்தில் இரண்டு ரயிலில் இருந்த தமிழரும் தாக்கப்பட்டார்கள். இந்த கலவரத்தின் பின்னணியில் ஒரு இயக்கம் இருந்திருக்க வேண்டும். ரயிலில் தமிழ் பெண்களின் தாலிக்கொடிகள் தங்க நகைகள் பறிக்கப்பட்டது. சூட்கேசு சாமான்கள் கொள்ளையடிக்கப் பட்டது. புகையிரதப் பகுதியில் கடமையாற்றிய சிற்றூழியர்கள் இதில் பெரும் பங்கு வகித்தார்கள். அனுராதபுரத்திற்கு வந்து சேர்ந்த தலைமன்னார் ரயிலிலும் இதேவிதத்தில் கொள்ளையடிக்கப் பட்டது. ரயில் நிலையத்தில் ஆயுதம் தாங்கிய பொலிஸார் நின்றார்கள். அவர்கள் எதுவும் செய்யவில்லை. பேசாமல் பார்த்துக் கொண்டிருந்தனர். அன்று சந்திரகாசனும் அதே ரயிலில் பிரயாணம் செய்தார். அங்கு நடந்தவற்றை அவர் நேரில் பார்த்தார் தாலிக் கொடிகளை குண்டர்கள் கையில் கோர்த்துக் கொண்டு சென்றார்கள். பொலிஸார் அதைப் பார்த்துக் கொண்டு நின்றனர்.

## அனுராதபுரம் நகரில்

17-ம் திகதி காலை கலவரம் அனுராதபுரம் நகரில் பரவியது. அனுராதபுரத்தில் பல வருடங்களாக நிரந்தரமாக, வாழ்ந்துவந்த தமிழர்களும் தாக்கப்பட்டனர். திட்டமிட்ட இயக்கம் அங்கு செயல்பட்டது. தமிழ் வீடுகளில் வாழ்ந்த தமிழர்கள் தாக்கப்பட்டதோடு, வீடுகளும் சேதப்படுத்தப்பட்டது. சிங்கள வீடுகளில் வாடகைக்கு இருந்த தமிழர் தாக்கப்பட்டனர். ஆனால் சிங்கள வீடுகள் சேதப்படுத்தப்படவில்லை. அனுராதபுரத்தில் நீண்டகாலம் வாழ்ந்த திரு. நடராசாவின் வீடு இடித்து தரைமட்டமாக்கப் பட்டது. டாக்டர்கள், அப்போதிக்கரிகள் ஆஸ்பத்திரியிலுள்ள சிற்றூழியர்களால் தாக்கப்பட்டனர். சிலர் காயங்களுடன் தப்பினர். காரைநகரைச் சேர்ந்த சிவசம்பு கொல்லப்பட்டார் இவைபற்றி வழக்கிருப்பதால் விளக்கிக் கூறவில்லை. ரயில் நிலையத்தில் சிற்றூழியர்களால் புகையிரத நிலைய அதிபர்கள் கொல்லப்பட்டனர். 4 தமிழ் உத்தியோகத்தர் கொல்லப்பட்டனர். ஒரு கல்வி திணைக்களக் கணக்காளர் 2 நாள் மரத்தில் பதுங்கியிருந்து தப்பினார்.

## நாடு முழுவதும் பரவியது

வடமத்திய மாகாணத்தில் நடந்த கலவரம் 18 ம் திகதி நாடு முழுவதும் பரவியது. அனுராதபுரம் எஸ். பி. 16ம் திகதி யாழ்ப்பாணம் வந்தார். நிலைமையை நேரில் பார்த்தார். ஒரு சிங்களவரும் தாக்கப்படவில்லை என்பதை கண்டார். பொறுப்பு வாய்ந்த அந்த அதிகாரியிடம் தமிழர்கள் போனபோது "யாழ்ப்பாணத்தில் நடந்ததிலும் இது என்ன பெரிதா, என்று கூறினார். சிங்களப் பெண் துன்புறுத்தப்பட்டதாகக் கூறினார். தளபதி அமிர்தலிங்கத்திடம் சொல்லுங்கள் என்று கூறினார். அனுராதபுரம் கச்சேரியில் உள்ள அகதிகளுக்கு தண்ணீர் வழங்கப்படவில்லை. வைத்திய அதிகாரி ஒரு தமிழராக இருந்தும், மற்ற இணைப்பு அதிகாரி தண்ணீர் விநியோகத்தை தடைசெய்துவிட்டார். அகதிகள் தண்ணீரில்லாமல் தவித்தனர். குழந்தைகளின் நா வரண்டு வீறிட்டு அழுதன

அரசாங்க அதிபரோ பொலிஸ் அதிபரோ எந்த உதவியும் செய்யவில்லை. 'அபலைகளின் குரல் அவர்கள் காதில் விழவில்லை.

கெக்கராவ பொலிஸ் நிலையத்திற்கு எதிரில் நீண்டகாலமாக வியாபாரம் செய்து வந்த தமிழர்களின் கடைகள், யாவும் தீக்கிரையாக்கப்பட்டன. கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு சாமான்களுடன் வந்த லொறிகள், பாதுகாப்புக்காக பொலிஸ்நிலையம் சென்றன. சுப்பிரமணியம் சகோதரர் மில்லில் லொறியை கொண்டு போய் விடுமாறு பொலிசார் கூறினார்கள். 5 லொறிகள் சாமான்களுடன் அங்கு நிறுத்தப்பட்டன. லொறியிலுள்ள சாமான்கள் கொள்ளையடிக்கப்பட்டு லொறிகள் தீக்கிரையாக்கப்பட்டன. லொறிச்சாரதிகள் கொல்லப் பட்டனர்.

## பொலிஸார் அலட்சியம்

இறந்தவர்களின் குடும்பங்கள் இன்சூரன்ஸ் பெறுவதற்காக அவர்கள் இறந்தது பற்றி அறிக்கை சமர்ப்பிக்குமாறு அனுராதபுரம் பொலிசாரின் உதவி நாடப்பட்டது. யாழ். சமூகசேவைப் பகுதியினர் இதுபற்றி பலதடவை, அனுராதபுரம் பொலிசுக்குக் கடிதம் எழுதினார்கள். ஆனால் எவ்வித பதிலும் கிடைக்கவில்லை. அனுராதபுரம் பொலிஸ் அதிபர் எவ்வித அக்கறையும் எடுக்கவில்லை, பதில் அனுப்பவில்லை.

இச்சமயத்தில் நான் ஒன்று கூறவிரும்புகின்றேன். பரந்தனிலிருந்து 12 மைல்களுக்குஅப்பாலுள்ள விஸ்வமடு அகதிகள் முகாமிற்கு நேரில்சேன்றேன். 3 குடும்பங்கள், கணவனை இழந்து தவிக்கின்றன. 17ம் திகதி காலை போனவர் திரும்பிவரவில்லை என்று ஒரு கைம்பெண் கூறினார். கணவன் திரும்பி வருவார் என்ற நம்பிக்கையில், அந்தப் பெண் வாழ்ந்துகொண்டிருக்கிறார். அவர்களுக்கு இரண்டாவது தவணைப்பணமான 9000 ரூபா இன்னும் வழங்கப்படவில்லை. கலவரத்தில் இறந்தவர்கள் பற்றி அறிக்கை சமர்ப்பிக்க ஏற்பாடு செய்யப்படவேண்டும், காணமல்போனவர்கள் கண்டுபிடிக்கப்படவேண்டும். கெக்கராவையில், லொறிச் சாரதி ஒருவர் துண்டுதுண்டாக வெட்டப்பட்டு குளத்தில் வீசப்பட்டார். இன்றுவரை அவரது சடலம் கண்டுபிடிக்கப்படவில்லை.

## வவனியா, திருமலை

இந்த நிலையில் வவனியா திருமலை பற்றி கூறவிரும்புகின்றேன். வவனியாவில் தமிழர் பெரும்பான்மையினராக இருக்கின்றனர், வவனியாவில் 20-ம் திகதிக்கு பின் கலவரம் ஆரம்பமானது. நான் வவனியா சென்று அங்கு நடந்தவை பற்றி 8 பேரிடம் சத்தியக்கடுதாசி முடித்து பிரதமருக்கு இணைத்து அனுப்பினேன். இத்துடன் அதன் பிரதிகளை உங்களுக்குச் சமர்ப்பிக்கின்றேன்.

வவனியா பொலிசில் சப் இன்ஸ்பெக்டர் நாதனும், சப் இன்ஸ்பெக்டர் கந்தசாமியும் கடமையாற்றினார்கள். நாதன், அகதிகளின் வாக்குமூலத்தை பதிவுசெய்ததற்காகவும், கந்தசாமி கொள்ளைச்சம்பவத்தை தடுத்து நிறுத்தியதற்காகவும் உடனடியாக இடமாற்றம்செய்யப் பட்டனர் நான் இடமாற்றத்தை நிறுத்துமாறும், விசாரணை நடத்துமாறும் கோரினேன்.

## எல்லைப் பகுதிகளில்...

வவனியா எல்லைப் பகுதியில் வாழ்ந்த பல தமிழ்க் குடும்பங்கள் அயலில் வாழ்ந்த சிங்களவர்களால், குறிப்பாக, முன்னாள் பயங்கரவாதிகளினால் கொள்ளையடிக்கப்பட்டனர். வவனியாவில் நடந்த சம்பவத்தில் பொலிசார் எடுத்த பங்கு இங்கு காட்டப்படவேண்டியிருக்கிறது. நாதனுக்கும் கந்தசாமிக்கும் கட்டளை அனுப்பி கூப்பிடப்பட வேண்டும். சில பொலிசார் சாட்சியமளிக்க பயப்படுகின்றனர். உயர்அதிகாரிகள் இப்பவும் கடமைபுரிவதால் சாட்சி சொல்ல பயப்படுகிறார்கள். உதவிபொலிஸ் மாஅதிபர் தமது கடமையைச் செய்ய தவறிவிட்டார்,

கமிஷனர்: அவரின் பெயரென்ன?

அமிர்: அனே செனரத்ன. வவனியா பஜாரும் கொள்ளையடித்து தீ வைக்கப்பட்டது. வவனியா பஜார் பொலிஸ் நிலையத்திற்கு பின்னால் 100 யார் தூரத்தில் உள்ளது என்பதை தங்கள் கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.

ஒரு நகைக்கடை கொள்ளையடிக்கப்பட்ட சமயம் சப் இன்ஸ்பெக்டர் கந்தசாமி சுடப்போன சமயம் தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் 'சுடவேண்டாம்' என தடுத்தார். ஒருவரைப் பிடித்து மல்லுக்கட்டியபோது அவர் தப்பிவிட்டார். பின் அவர் கைதாகி றிமாண்டில் வைக்கப் பட்டார். அவர் முன்னாள் பயங்கரவாதியான ரூபசிங்காவாகும். அவர் றிமாண்டில் நோயினால் மரணமாகிவிட்டார்.

## 8 கிராமங்கள் கொள்ளை

வவனியா எல்லையிலுள்ள 8 கிராமங்கள் கொள்ளையடிக்கப்பட்டன. வீடுகள் எல்லாம் எரிக்கப்பட்டன. பொலிஸாரின் அனுசரணையுடனேயே இச் சம்பவங்கள் நடந்ததென்று தகவல் கிடைத்துள்ளது.

முல்லைத்தீவு கொக்கிளாயில் சுப்பிரமணியம் என்பவர் சத்தியக்கடுதாசி முடித்துள்ளார். அவர் வீடு தாக்கப்பட்டது,

கமிஷனர்: எவ்விடத்தில்?

அமிர்: முல்லைத்தீவில் வவனியா மாவட்டத்தில், மினரல் கோர்ப்பரேசன் வாகனத்தில் சென்று வீட்டை சேதப் படுத்தியுள்ளார்கள்.

## மன்னாரில் கலவரம்

மன்னார் மாவட்டத்தைப் பற்றி கூறவிரும்புகிறேன். அங்குசிங்களவர் ஒருவர் கொல்லப்பட்டார், அதிலிருந்து பொலிசாரும், இராணுவத்தினரும் கலவரத்தை மன்னாரில் ஆரம்பித்தனர். பல தமிழர்கள் தாக்கப்பட்டனர், கடைகள் கொள்ளையடிக்கப்பட்டன. இதுபற்றி நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல்செய்யப்பட்டுள்ளது. மன்னாரில் இராணுவத்தினர் முழுப்பேரும் ஈடுபடவில்லை. தனிப்பட்ட ஒருசிலர் மட்டுமே ஈடுபட்டனர்.

திருகோணமலை, 1948ம் ஆண்டுக்குமுன் தமிழ்ப்பேசும் பகுதியாக இருந்தது. சுதந்திரத்திற்குப் பின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் நடைபெற்றது. அல்லை, கந்தளாய், பதவியா மற்றும் பல இடங்களில் ஆயிரக்கணக்கான சிங்களவர் குடியேற்றப்பட்டனர். நாட்டில் வகுப்புக்கலவரம் ஏற்பட்டதும், திருமலை எம்.பி திரு. சம்பந்தன், அரசாங்க அதிபருடனும், பொலிஸ் அதிபருடனும்சேர்ந்து சிங்கள தமிழ் மக்களை அமைதியாக இருக்குமாறு கூட்டாக வேண்டுகோள் விடுத்தார்,

## குடியேற்ற பகுதியில்

20-ம் தேதிவரை திருமலையில் கலவரம் எதுவும் நடக்கவில்லை. குடியேற்றப்பகுதியான. அல்லை, கந்தளாயில், தமிழர்கள் தாக்கப்பட்டு கொல்லப்பட்டனர். இதெல்லாம் குடியேற்றப் பகுதியிலேயே நடந்தது. என்ஜினியர் ஒருவரின் வீடு சேதப்படுத்தப்பட்டது. மனைவி தாக்கப்பட்டார். உயர்கல்வி பயின்ற தமிழ் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டார். தம்பலகாமத்தில் சூட்டுச்சம்பவம்நடந்தது. இரண்டு அல்லது 3 சிங்களவர் தம்பலகாமத்தில் இறந்தனர். 20ம் திகதி ஊரடங்குச்சட்டம் போடுவதற்கு 2 மணித்தியாலத்திற்கு முன்னர் நன்றாக திட்டமிடப்பட்டு பல தமிழர்கள்கொல்லப்பட்டனர்.

....

[கொழும்பு[

ஓடும் பஸ்ஸில் இருந்து நபர் ஒருபரிடம் 17000 ரூபா ரொக்கப்பணம் அபகரிக்கப் பட்டது.

சம்பவ தினத்தன்று கொம்பனித் தெருவில் இருந்து பஸ் ஒன்றில் வந்து கொண்டிருந்த பிரஸ்தாப நபரிடம் இருந்து கொழும்பு றீகல் தியேட்டருக்குச் சமீபமாக வைத்து அபகரித்துக்கொண்டு திருடன் தப்பியோடி விட்டான்.

பொலிசார் விசாரணை நடத்துகின்றனர். [உ[

## தமிழர்..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கணித்து விட்டு விடுவதால் பெரும்பான்மை மக்களான சிங்கள சகோதரர்களுக்கு நன்மையாகவே இருக்கும் என்றும் கூறினார்.

அவர் சாட்சியளிக்கையில் கூறியதாவது: '15ம் திகதி காலை 8-30 மணிக்கு நான் யாழ்ப்பாண எம். பி. வீட்டை நோக்கி சென்று கொண்டிருந்தபோது பெருந்திரளானோர் வீட்டுக்குள் நின்றனர். பொலிஸாரால் தாக்கப்பட்டவர்கள் பாதுகாப்பிற்காக வந்து அங்கு கூடினின்றனர். அப்போது 30 அல்லது 40 ஆயுதம் தாங்கிய பொலிஸார் அங்கு [illegible] வந்தனர். அவர்களில் சிலர் வீட்டுக்குள்ளே சென்றனர் திரு. யோகேஸ்வரனை சிங்கள மொழியில் [illegible] கள். எனக்கு [illegible] ஆனால் [illegible] அறிந்துகொண்டேன், திரு. யோகேஸ்வரன் வெளியில் வந்து அவர்களை வீட்டை விட்டு வெளியில் செல்லுமாறும் பிரதமருடன் தொடர்புகொள்ள விருப்பதாகவும் கூறினார்.

[மிகுதி நாளை வரும்]



## மரண அறிவித்தல்

### ஜே. சி. சபாரத்தினம்

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி முன்னைநாள் ஆசிரியர் ஜே. சி. சபாரத்தினம் காலமானார். இவர் நல்லம்மாவின் அன்புக் கணவரும் இரத்தினசிங்கம் ]நைரோபி[. டாக்டர் பேர்ள் அரியமலர் ]நைஜீரியா[, ரூபி, ஜெயசிங்கம் [மகாஇலுப்பள்ளம ;விவசாய திணைக்களம்], ஜெயராஜசிங்கம் ]நெடுஞ்சாலை திணைக்களம் மன்னார்], இராசமலர், சற்குணசிங்கம் [விவசாய திணைக்களம், பரந்தன்] ஆகியோரின் தந்தையும், அமிர்தராணி [நைரோபி], யோகராசா [தொழில் திணைக்களம், யாழ்ப்பாணம்.] காலஞ்சென்ற பிறெட் இரத்தினசிங்கம். யோகேஸ்வரி [மானிப்பாய் மகளிர் கல்லூரி], கிறேஸ் [எருக்கலம்பிட்டி ம. ம. வித்தியாலயம்] கனகரத்தினம் [கிறீன்ட்லேய்ஸ்வங்கி, கொழும்பு], மீனலோஜினி ஆகியோரின் மாமனாரும், செல்லம்மா, எஸ். சி. இராசரத்தினம் ஆகியோரின் சகோதரனுமாவார். தெல்லிப்பழையில் உள்ள "குமரன் குன்றம்'' இல்லத்திலிருந்து அன்னாரது பூதவுடல் நல்லடக்கத்திற்காக [11-2-78] இன்று பிற்பகல் 4-30 மணிக்கு தெல்லிப்பழை சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

8482





### தேவை

தராதரம் பெற்ற சங்கீத ஆசிரியர் தேவை. தையல் பாடம் கற்பிக்கக்கூடியவருக்கு முன்னுரிமை வழங்கப்படும். 14-2-78க்கு முன் விண்ணப்பிக்குக. மணித்தியாலக்கணக்கில் சம்பளம் வழங்கப்படும். அதிபர், ஆறுமுக வித்தியாலயம், சுழிபுரம். 5866



இப்பத்திரிகை "ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் லெவ்கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம்ஆண்டு பெப்ரவரி மாதம் 11-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No. 49, Jaffna. Telegram Eelanaadu. Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka